# கல்கி

18-8-68

விலை 20 காசு





# இலண்டனில் இருபது நாட்கள்

## 3. மேலைநாடு புறப்பாடு

"நீ இலண்டன் செல்ல ஏற்பாடு செய்திருக்கிறேன்."

இனிக்கும் இந்தச்செய்தியை தமிழகத்தின் முதல்வர் பேரறிஞர் அண்ணா அவர்கள் என்னிடம் திடீரென்று கூறியது கேட்டுத் திகைத்துப் போனேன்.

நான் சிறிதும் எதிர்பாராத வகையில் எனது எதிர்காலக்குறை அதிவிரைவில் நனவாகப் போகிற செய்தியை அண்ணாஅவர்கள் சென்னை ஜெனரல்ஆஸ்பத்திரியில் வைத்துக் கூறினார். அப்போது அண்ணா அவர்கள் சென்னை ஜெனரல் ஆஸ்பத்திரியில் தங்கி வயிற்று நோவுக்கு சிகிச்சை பெற்றுக்கொண்டிருந்தார். தினசரியும் அண்ணா அவர்களைக் காணவும் அரசியல் பற்றி உரையாடவும் நான்போய் வந்துகொண்டிருந்தேன். அப்போது ஒருநாள் அண்ணா அவர்கள் நான் இலண்டன் செல்ல ஏற்பாடு செய்திருப்பதாகச் சொன்னார்கள்.

நான் எதுவும் புரியாமல் விழிப்பதைப் பார்த்து அறிஞர் அண்ணா அவர்கள் மேலும் விளக்கிச் சொன்னார்கள்.

பிரிட்டிஷ் காமன்வெல்த் பாராளு மன்ற சங்கம் அழைப்பு ஒன்று வந்து இருப்பதாகவும், அதற்கு என்னை அனுப்பச் சொல்லி இருப்பதாகவும், அண்ணா அவர்கள் கூறினார்கள்.

பின்னர் இது பற்றி முழு விபரத்தையும் தமிழக சட்ட மன்றத் தலைவர் மாண்புமிகு சி. பா. ஆதித்தனார் அவர்கள் எடுத்துரைத்தார்கள்.

பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளில் எல்லாம் "பாராளுமன்ற சங்கம்" ஒன்று இயங்கி வருகிறது. இவை எல்லாவற்றிற்கும் தலைமைக் கழகமாக "பிரிட்டிஷ் காமன்வெல்த் பாராளுமன்ற சங்கம்" என்ற பெயரில் இலண்டன் மாநகரத்தில் ஒரு அமைப்பு இருந்து வருகிறது.

பிரிட்டிஷ் காமன்வெல்த் நாடுகளில் எல்லாம் பாராளு மன்ற முறையில் ஜனநாயகம் நன்குவளர, அனைவரும் கூடி ஆராயவும். கலந்துரையாடி கருத்துப் பரிமாறவும். மாநாடு கூடி மாற்றங்கள் பெறவும், நாடு பல கண்டு கேடு களையவும், ஆண்டுக்கொரு நிகழ்ச்சியினை ஏதாவது ஒரு காமன்வெல்த் நாட்டில் நடத்தவும், இலண்டன் மாநகரில் உள்ள பிரிட்டிஷ் காமன்வெல்த் பாராளுமன்ற தலைமைச் சங்கம் தக்க பணியாற்றி வருகிறது.

இதே சங்கத்தின் அழைப்பின் பேரில்தான் முன்னாள் எதிர்க் கட்சித் தலைவர்களாக இருந்த கனம் வி. கே. இராமசாமி முதலியாரும், நாவலர் நெடுஞ்செழியன் அவர்களும் வெளிநாடுகள் சென்று வந்தனர்.

இவ்வாண்டு (1968) மே முதல் தேதி முதல் பாராளு மன்றப் பயிற்சி வகுப்பு ஒன்றை இலண்டன் மாநகரில் இருபது நாட்கள் நடத்தவும் – வட அயர்லாந்து, ஜெர்சி தீவு ஆகிய நாடுகளின் பாராளு மன்ற முறையை நேரில் சென்று நான்கு நாட்கள் தங்கி கண்டறியவும் திட்டமிட்டு காமன்வெல்த் நாடுகள் ஒவ்வொன்றுக்கும் பிரிட்டிஷ் காமன்வெல்த் பாராளு மன்ற சங்கம் அழைப்பு அனுப்பியது. இந்த அழைப்பு தமிழகத்தில் இயங்கிவரும் காமன்வெல்த் பாராளு மன்ற சங்கத்துக்கும் வந்தது.

இந்த அழைப்புக்கு யாரை இலண்டன் அனுப்பலாம்–என்ற கொள்கையை தமிழக சட்ட மன்றத் தலைவர் மாண்புமிகு சி. பா. ஆதித்தனார் அவர்கள் அறிஞர் அண்ணாவிடம் கேட்க, "ஆசைத்தம்பியை அனுப்புங்கள்"–என்று அண்ணா அவர்கள் கூறியிருக்கிறார்.

இதன் பின்னர்தான் அறிஞர் அண்ணா அவர்கள் என்னிடம் "நீ இலண்டன் செல்ல ஏற்பாடு செய்திருக்கிறேன்"–என்று கூறினார்.

பாராளு மன்ற முறைப்படி ஒரு பிரதிநிதியை சட்ட பூர்வமாகத் தேர்ந்தெடுக்க தமிழக காமன்வெல்த் பாராளு மன்றத்தின் உறுப்பினர்கள் கூட்டம் கூடி, என்னை ஒருமனதாகத் தேர்ந்தெடுத்து அறிவித்தது.

★

[வளரும்]

ஏ.வி.பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ.

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாதம் ரூ. 5

மலர் 5 18-8-68 இதழ் 4

# அந்த இருபத்தோராண்டுகள்

இந்தியத் துணைக்கண்டம் சுதந்திரமடைந்துவிட்டதாகப் பிரகடனப்படுத்தப்பட்டு இருபத்தோரு ஆண்டுகள் முற்றுப் பெற்று—இருபத்தி இரண்டாவது ஆண்டும் பிறப்பெடுத்துவிட்டிருக்கிறது.

கடந்த இருபத்தோராண்டுகள் பற்றி, சுதந்திரம் பெற்றுக்கொண்டிருப்போர் என்று நம்பப்படுகிற நாட்டுக் குடிமக்கள், கணக்குப் போட்டுப்பார்க்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள்.

இன்றுவரையில் தங்கள் வாழ்க்கைத் தரம் எந்த அளவுக்கு உயிர்வடைந்திருக்கிறது?

நாட்டில் பொருளாதாரச் செழிப்பின் அளவு எந்த அளவுக்கு விரிவடைந்திருக்கிறது?

தொழில் துறையில் எந்த அளவுக்கு முன்னேற்றம் கண்டிருக்கிறது?

சுயதேவைப் பூர்த்தியில் எதனை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறது?

மனித உரிமைகள், எந்த அளவுக்கு பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கப் பட்டிருக்கிறது?

சட்டங்களின் கொடுங்கரங்கள் எந்த அளவுக்கு முதுகெலும்பை உடைத்துவிட்டிருக்கிறது?

வாழ்க்கை கிடைத்திருக்கிறதா? அது வகையோடு, வளமோடு இருக்கிறதா?

என்பன போன்ற வினாக்களால், கடந்த காலத்தைப் பற்றிக் கணித்துப் பார்க்கும் கடமை வலுக்கட்டாயமாக மக்கள் மீது திணித்துவிடப் பட்டிருக்கிறது.

சுதந்திரத்திற்குச் சொந்தக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளும் காங்கிரசுக்காரர்களின் தலைமையின் கீழ்தான் கடந்த இருபதாண்டுகள் இந்தியத் துணைக்கண்டத்து மக்கள் வழி நடத்திச் செல்லப்பட்டிருக்கிறார்கள்.

சுதந்திரத்தின் இருபதாம் வயது நிறைவை, பல மாநிலங்களில் எதிர்க்கட்சிகள் கூடிக் கொண்டாடி இருப்பதிலிருந்து, நாட்டு மக்களை, காங்கிரஸ் சரியான வழியில் நடத்திச் செல்லவில்லை என்பதும், அதன் தலைமையை நாட்டு மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் விரும்பாமல் ஒதுக்கித் தள்ளிவிட்டார்கள் என்பதும் தெளிவாகப் புலப்படுகிறது.

வாழ்க்கைத்தரம் உயர்வடையவில்லை.

மனித சுதந்திரம் மதிக்கப்படவில்லை.

வரிக்கொடுமைகள் வாட்டி வதைத்திருக்கின்றன.

ஏகபோக ஆதிக்கம், ஒரு சர்வாதிகார கெடுபிடியையே உண்டாகி விட்டிருக்கிறது.

காங்கிரசின் தலைமையில் இனி வாழ முடியாது—கூடாது.

என்பதனைப் பிரதிபலித்துக் காட்டுபவைகள் அல்லவா இந்த நிலைமைகள்?

கடந்த இருபதாண்டுக் காலத்தில் காங்கிரஸ் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களைப் போட்டு செயல்பட்டு வந்திருக்கிறது. அவற்றின் பலன்கள் மக்களுக்குக் கிடைத்ததா என்பதல்ல இங்கே சுட்டிக் காட்டப்படுவது. அவை வெற்றிகரமாகச் செயல்பட்டிருந்தால் நான்காவது திட்டம்—இத்தனை தூரம் தடுமாற்றத்திலிருப்பானேன்?

இவைகளிலிருந்து, இவற்றை நடாத்திச் செல்லும் காங்கிரசும், மத்திய அரசும் தாம் ஏற்றுக்கொண்டிருக்கிற பொறுப்பில் முழு அக்கறை காட்டிச் செயல்படவில்லை என்பதோடு, அரசாங்கத்தின் தலைமைப் பதவிக்கான போட்டியிலேயும், அதனைக் காத்துக்கொள்ளும் செயற்பாடுகளிலும்தான் ஈடுபாடு கொண்டு வந்திருக்கிறது என்பதை எப்படி மறுக்க முடியும்?

மறைந்த பிரதமர் நேருவின் காலம் வரையில், உட்பூசல்கள் அனைத்தும் மறைக்கப்பட்டு, அவரது புகழொளி முன் மங்கிப்போய், ஏதோ ஒரு விதமாக நாடு நடத்திச் செல்லப்பட்டது. அதனாலேயே காங்கிரஸ் கட்சியும், அனைத்து மாநிலங்களிலும் சுதந்திர நாள் விழாவினை, தன் உரிமையோடு கொண்டாடியும் வர முடிந்தது.

லால்பகதூர் சாஸ்திரியின் காலத்தில் வெடித்துவிட்ட இந்தப் பூசலும், கொள்கைப் போட்டிகளும், இந்திரா அம்மையாரின் காலத்தில் தலைவிரித்து ஆடத் தொடங்கி இருக்கிறது. அதனாலேயே பல மாநிலங்கள் காங்கிரசின் கரம் விட்டுப் போய், சுதந்திர விழாக்களை எதிர்க் கட்சிகள் கொண்டாடிக் களிக்கத் தொடங்கி இருக்கின்றன. இதனால் ஒரு நாட்டின் சுதந்திரவிழாவை எதிர்க் கட்சிகள் கொண்டாடக்கூடாது என்பதல்ல—அதனை உரிமை கொண்டாடும் ஒரு கட்சி உயிரோடு இருக்கும்போதே, இப்படிப்பட்ட ஒரு அவலம் அதற்கு ஏற்பட்டிருக்கக்கூடாது என்பதுதான்!

இருபத்தி இரண்டாம் ஆண்டு விழா நாளைத் தொடங்கிவைத்து—

"நம் பொருளாதாரத்தில் அடிப்படை மாறுதலுண்டாக்க இடைவிடாத — ஒழுங்கான—முயற்சி தேவைப்படுகிறது"

என்று குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர்உசேன் கோடிட்டுக்காட்டி இருப்பதிலிருந்து, கடந்த இருபத்தோராண்டுகளில் இந்தியத் துணைக்கண்டத்தின் அடிப்படைப் பொருளாதாரமே எந்த அளவுக்குப் பாழ்பட்டுப் போயிருக்கிறது என்பதைப் புரிந்துகொள்ள முடியும். மேலும் அவருடைய பேச்சில்—

"பழைமைச் சிறப்பு வாய்ந்த நமது மாபெரும் நாட்டிடமும், பல நூற்றாண்டுகளாக மனித

(16-ம் பக்கம் பார்க்க)




## 3. ஓலை இங்கே—உரியவன் எங்கே?

கெல்லாஸ் மண்டலம் அளவில் சிறிதானாலும் கிரேக்க சாம்ராஜ்யத்தில் அதற்குத் தனி மதிப்பிருந்தது. சிற்பிகள், கலைஞர்கள், தத்துவப்போதகர்கள் நிறைந்த இடம் கெல்லாஸ்.

மண்டலாதிபதி கிளிஸ்தெனீஸ் கற்றறிந்த மேதை, கலைஞானம் படைத்தவன். இரண்டு புதல்வர்கள் அவனுக்கு. மூத்தவன் பெயர் டிராக்கோ, இளையவன் பெர்க்ளீஸ். பட்டத்துக்கு வரவேண்டிய டிராக்கோவுக்கு மணமுடிக்கத் திட்டமிட்டான் கிளீஸ்தெனீஸ். டிராக்கோவுக்கு ஏற்றவள் கிடைத்திட எந்நேரமும் சிந்தித்துக்கொண்டிருந்தான். அவனுடைய சிந்தனை, களைப்புறும் போதெல்லாம் டெல்பியிடம் சரணடைந்தது. மன்னனுக்கு மனதில் அமைதி ஏற்படவில்லை. நல்லநாள் பார்த்து டெல்பிக்கு வருவதாகத் தெரிவித்தான். அழகிய வெண்புரவியில் ஆரவாரத்துடன் டெல்பிக்குப் போனான். மக்கள் இருவரும் மன்னன் பின் தொடர்ந்தனர். வழக்கம்போல் டெல்பியில் புகை மண்டலம் கிளப்பிவிடப்பட்டது. மன்னன் மண்டியிட்டு மனச்சோர்வு தீர மாமருந்து வேண்டினான்—டெல்பிப் பெண்ணிடம்!

"மன்னா மூத்தமகன் டிராக்கோவுக்கு மனையாள் தேடி அலைகிறாய்! ஆனால் அவனுக்கு முதலில் இளையவன் பெர்க்ளீஸ் மகுடபதியாகப் போகிறான்" என்று இடியைப்போட்டாள்.

கிளிஸ்தெனீஸ் குழம்பினான். டிராக்கோவும், தம்பி பெர்க்ளீசும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டனர்.

"தவறு கெல்லாஸ் ராசகுமாரர்கள் சபலத்திற்கு ஆட்பட்டவர்களல்ல!" என்றான் பெர்க்ளீஸ் வெடுக்கென்று.

"பேசுவது யார்? டிராக்கோவா? பெர்க்ளீசா?" என்று கிண்டலாகக் கேட்டாள் டெல்பிகுரு.

"சின்னவன்தான் பேசுகிறேன். சிரசிலே முடிதரித்துச் சிங்காதனம் ஏற மூத்தவர் இருக்கும்போது இளையவன் எப்படி முடிசூட முடியும்?"

"சபதம் போடாதே பெர்க்ளீஸ்! ஜாதகப்படி நீ சாம்ராஜ்யாதிபதியாகியே தீரவேண்டும்! இது ஆண்டவன் கட்டளை! அதை மாற்ற உன்னாலும் முடியாது, என்னாலும் முடியாது. உனக்குச் சொன்னாலும் புரியாது" டெல்பி குரு அறுதியிட்டு உறுதியாகக் கூறினாள்.

கிளிஸ்தெனீஸ் கிறுகிறுத்துப் போனான். மூத்தவனிருக்க இளையவனுக்குப் பட்டமா? அய்யோ! ஆகாது கூடாது. கெல்லாஸ் அழியப்போகிறது. உள்நாட்டுப் போர் எழப்போகிறது, அண்ணனும் தம்பியும் களத்தில் எதிர் எதிரே நின்று போரிடப் போகிறார்கள்; தந்தையின் கண்ணெதிரே இந்த அலங்கோலமா? கிளிஸ்தெனீஸ் ஆடாமல் அசையாமல் நின்று, நினைத்து நினைத்து உருகினான்.

"தெய்வத் திருவுருவே, சகோதர பாசம் சிதையாதிருக்க வழிகூறிக் காப்பாற்றவேண்டுகிறேன், கெல்லாஸ் அமைதியான மண்டலம். பொல்லாத செயல்களுக்கு இதுவரை நான் இடம் கொடுத்ததில்லை. பிழையேதும் செய்தறியேன் பிரபு! நாட்டில் வறுமை ஒழிந்து வளம் கொழிக்கப் பாடுபட்டிருக்கிறேன். கற்றவர்களைக் கௌரவித்திருக்கிறேன். கலைஞான மிக்கோருக்குப் பொன்னும் பொருளும் தந்து ஊக்குவித்திருக்கிறேன். கொற்றம் கவிழ்க்க வந்தவர்களுக்கெல்லாம் கூற்றுவனாக இருந்திருக்கிறேன். ஆனால் இன்று சுற்றத்திற்குள் பகை முளைத்துவிட்டதே என்ற துயரம் தான் என்னை அரித்துத் தின்னுகிறது தேவி! பகை தீர்க்க மார்க்கமில்லையானால், வேறு வகையில்லை நான் பிழைப்பதற்கு! பன்னீரில் குளித்து, பழச்சாறு அருந்தி, பல்சுவை உணவுகொண்ட என் உடலை இன்று தீராத நோய் தீண்டிவிட்டது."

கிளிஸ்தெனீஸ் தலைப்பிள்ளையைப் பறிகொடுத்த தாயைப்போல் வாய்விட்டுப் புலம்பினான். மக்கள் மீது அவன் வைத்திருந்த அன்பு அவனதுபுலம்பலில் இழையாடியது. நாட்டின்பால் அவன் காட்டிய பற்றை அவன் விட்ட பெருமூச்சு வெளிப்படுத்தியது.

மூத்தவன் டிராக்கோ வாய்மூடிச் சிலையாக நின்றான். பேசினால், தான் உரிமைக்குப் போராடுவதாகத் தம்பி நினைத்துவிடுவானென்ற பாசம் அவனைத் தடுத்து நிறுத்திவிட்டது.

இளையவனுக்கு இரத்தம் கொதித்தது. நரம்புகள் புடைத்தன. குமுறி எழுந்தான்.

"இளவல் பேசுகிறேன் குருதேவி! டெல்பியின் வாக்குப் பொய்க்கப் போகிறது என்பதற்காக நான் வருத்தப்படுகிறேன், பரம்பரை பரம்பரையாக கிரேக்கப் பேரரசு டெல்பிக்குச் செலுத்திவந்த முதல் மரியாதை அழிவதற்கு கெல்லாஸ் மண்டலம் மூலகாரணமாக இருக்கப்போகிறதே என்பதற்காக வருத்தப்படுகிறேன். இந்தப் பெர்க்கிளீஸ் ஒருபோதும் மன்னனாகமாட்டான். நடக்கவே நடக்காது!" என்று கர்ஜித்தான் பெர்க்ளீஸ்.

"பெர்க்ளீஸ்! தரமறியாச் சிறு

(15-ம் பக்கம் பார்க்க)

# கண்ணீர் நின்றது

பாரதி முருகேசன்

விம்மலுக்கும் கண்ணீருக்கும் இடையே அந்தக் கடிதத்தை அவள் ஐந்தாவது முறையாகப் படித்தாள்! வாடிவதங்கிச் சருகாகி விட்ட அவள் வாழ்வின் அவளுடைய ஒரே துணையாக இன்றிருக்கிற அந்த ஒரே மடலை—அவள் மனம் விட்டுப படித்தாள்!

அன்பு வசந்தி!

நலம்தானே? நான் இந்த மடலை மதுரையிலிருந்து எழுதுகிறேன். வீட்டில் அப்பா நலமாக இருப்பார் என நினைக்கிறேன்.

இந்த மடலை அவசர அவசரமாக எழுதக் காரணம்தான் உனக்குத் தெரியுமே? தலைக்குமேலே மாணவத் தோழர்கள் எனக்குப் பொறுப்பைக் கொடுத்துவிட்டார்கள். 'அனைத்துக் கல்லூரி மாணவ தலைவனா'க என்னை நியமித்து அன்புத் தொல்லைகட்கு ஆளாக்கிவிட்டிருக்கிறார்கள்! நாளை எங்கள் கல்லூரியும் மற்றும் மதுரையிலுள்ள எல்லா கல்லூரிகளும் ஐந்தாவது நாளாக இந்தி எதிர்ப்புப் போராட்டத்தைத் துவக்க இருக்கின்றது! பிரம்மாண்டமான ஊர்வலம் ஒன்று நடத்தத் திட்டமிட்டிருக்கிறோம்! இதைப் பற்றியெல்லாம் உனக்கு எங்கே தெரியப் போகிறது......

வருங்கால வாழ்வு வளம் பெறுவதற்காகவும்-இனிவரும் தலைமுறையினருக்காகவும் 'வருமுன்னர்க் காத்தல்' செய்து வருகின்றோம், பெண்களாகிய நீங்கள்—அதுவும் படித்த பெண்ணாகிய நீ—எங்கோ ஓர் மூலையில் அவிநாசி எனும் கிராமத்தில் வசித்தாலும், உன்னுடைய கடமை என்ன என்பதைத் தெரிந்து நடக்க வேண்டும் இந்தப் போராட்டத்தை வெற்றிகரமாக முடித்து அடுத்த வாரமே உன்னைக் காண நான் ஓடோடி வருகிறேன். அதுவரை பொறு, திரு கண்ணே!

உன் அன்பு காதலன்,

குணசேகரன்.

என்றோ—ஆறு மாதத்திற்கு முன் வந்திருந்த அந்தக் கடிதத்தை மீண்டும் அவள் படித்துமுடித்தபோது, வசந்தியின் தந்தை அந்த அறையினுள் மெதுவாக காலடி எடுத்து வைத்தார். இருமிக்கொண்டே நுழைந்த அவர் வருவதைக் கண்டதும், கடிதத்தை மறைக்க முயன்றாள் வசந்தி. ஆனால்—எப்படியோ தந்தை பார்த்துவிட்டார்! அடுத்த விநாடி அவர் வாயிலிருந்து வந்த சொற்கள் கடுமையாக இருந்தன:

"இதோ பாரு வசந்தி...நானும் ஆறு மாசமாப் பார்த்துட்டு வர்றேன் ...நீ இப்படியே கண்ணீரும்கம்பலையுமாய் இருக்கிறது உனக்கே நல்லாயிருக்கா? பூவும் — பொட்டுமாய் இருக்கவேண்டிய ஒரு கன்னிப் பொண்ணு — இப்படியா பேயறைந்தவள் மாதிரி தலைவிரி கோலமாய் இருக்கிறது...வசந்தி...

நீ படிச்ச பொண்ணு. இப்படியெல்லாம் அழுதுகிட்டே இருந்தா உடம்பு என்னத்துக்காகும்? ... அந்தப் பயதான் போராட்டத்திலே நிம்மதியா கண்ணை மூடிட்டானே... காதலு — கீதலு எல்லாமே நமக்கு ஒத்து வராது அம்மா...பேசாமெ போய் ... முகத்தைக் கழுவிக்கிட்டு வா..."

"அப்பா! அன்பு உள்ளத்தைப் புரிஞ்சுக்காமே இப்படிப் பேசறது உங்களுக்கே நல்லாயிருக்கா! அவர் இந்த உலகத்தை விட்டுப் போய் முழுசா ஆறு மாசமாயிட்டுது...நான் இன்னும் உயிரோட இருந்துக்கிட்டிருக்கேனே ...... அதுவே பெரிய பாவம்..."

"வசந்தி! போனதை மறந்து இனிமே நடக்க வேண்டியதைப் பாரம்மா! குணசேகரன் இனிதிரும்பி வந்துடப் போறதில்லை. அவனைப் பற்றிய ஞாபகங்களை நீ மறந்து, இனிமேல் புது வாழ்வைத் தொடங்கு ...... நீ சரின்னு சொல்லம்மா!...உனக்கு அடுத்த வாரமே நல்ல வரனா தேடிக் கல்யாணத்தைச் செஞ்சு வச்சுடரேன்..." தந்தையின் சுயநலம், மகளுக்காக வாதாடியது. மகளின் தியாகம் அதை மறுத்தது!

இதைக் கேட்டு வசந்தி பலமாகச் சிரித்தாள். விரக்தி அந்தச் சிரிப்பில் இழையோடியது.

"அப்பா! நீங்க பேசறதைக் கேட்டா எனக்குச் சிரிப்புத்தான் வரது......வாழ்க்கைங்கிற அருமையான, அழகான மலர்லே இருக்கற இதழ்கள் கீழே விழுந்து சருகாகி விட்ட பிறகு...அதை எப்படியப்பா எடுத்துத் தெய்வத்துக்குப் போட முடியும்......என்னுடைய சகலவிதமான நம்பிக்கைகளுக்கும் பெட்டகமாக விளங்கிய அந்தப் பொன்னுயிர் போன பிறகு எனக்கெதுக்குப்பா கல்யாணம்—காட்சி யெல்லாம்..."

"அப்படீன்னா ... நீ கல்யாணமே செஞ்சுக்கப் போறதில்லையா...?"

"அப்பா ......... எனக்கு இதயம் இருக்கே! ... பாழாப்போன தமிழ்க் குடியில் பிறந்து தொலைச்சுட்டேனே..."

"அப்ப ... நீ காலம் முழுவதும் கன்னியாகவே இருந்துடப் போறியா?"

"அதான் சொல்லிட்டேனே...!"

பீறிட்டெழும் கண்ணீரை அவளால் தடுத்துநிறுத்த முடியவில்லை.

தொண்டையைத் துக்கம் அடைக்க அவள் விம்மலுடன் வீட்டினுள்ளே சென்ருள்!

வெளியே சிலையென தந்தை நின்று கொண்டிருந்தார்!

• • •




என்றுமில்லாத ஆனந்தத்துடனும்—சந்தோஷத்துடனும் வசந்தி. தனது கையில் அன்றைய செய்திப் பத்திரிகையுடன், வாயிலில் 'ஈஸிச் சேரில்' சாய்ந்து உட்கார்ந்து கொண்டிருந்த தனது தந்தையை நோக்கி ஓடிவந்தாள்!

"என்னம்மா அப்படி தலைதெறிக்க ஓடிவரே?"

"அப்பா...!அப்பா......!"

"சொல்லம்மா? என்ன?"

தந்தையின் முகம் மலர்ந்திருந்தது...ஆறுமாதத்திற்குப் பிறகு இன்றுதான் தனது மகளின் முகத்தில் லேசாக அரும்புகின்ற புன்னகையை அவர் காண்கின்ருர்!

'அப்பா...நம்ம 'அவருக்கு'......மதுரையிலே சிலையெடுத்திருக்காங்களாம்...அதை நம்ம முதலமைச்சர் அண்ணு அவர்கள் திறந்து வைச்சிருக்காராம்......"

இதைக்கேட்டதும் வசந்தியின் தந்தை முகம் சுருங்கியது! பொங்கியெழுந்த மகிழ்ச்சியைக் கரையிட்டுத் தடுத்தாள் வசந்தி!

"அடபோம்மா! நான் என்னமோ ஏதோன்னு பெரிசா நெனச்சுகிட்டேன்...இந்தப் பொழப்புக்கெட்ட வேலையைத்தான் ஏதோ பெரிசா நெனச்சிகிட்டு சொல்லிட்டு ஓடிவர்ரியா...அவர் முகம் கடுகடுத்திருந்தது!

பொங்கியெழுந்த வியர்வைத் துளிகளை வசந்தி அப்படியே துடைத்துவிட்டுக் கொண்டாள். 'அட ஆண்டவனே...என்ன அறியாமை இது!......உலகத்திலேயே யாருக்கும் கிடைத்திராத பேர் என் 'அவரு'க்குக் கிடைத்தது. என் தந்தைக்குத் தெரியவில்லையே...ஆண்டவனே என் தந்தையை மன்னிச்சுடு......பொழப்புக்கெட்ட வேலையென்று எண்ணி என் அவரைப் போல் பல்லாயிரக் கணக்கான தூய இதயங்களைத் தன் காலடியில் போட்டு நசுக்குகின்ற பச்சு இதயங்கள் இன்னும் உயிரோடு இருக்கின்றனவே...சற்றும் நடுங்காமல், துள்ளி வரும் காளைகளை துப்பாக்கியால், பறவைகளைச் சுடுவதுபோல் சுட்டுப் பொசுக்கிய அந்த மூடருக்கும்—என் தந்தைக்கும் என்னதான் வித்தியாசம் இருக்கமுடியும்?.........என் தந்தை போன்றவர்களுக்கு இப்படிப் பேசுவது வெறும் பொழுது போக்காகவும்—வேடிக்கையாகவும் இருக்கலாம். ஆனல்—அந்த உத்தமரைப் போன்ற பல்லாயிர தூய இதயங்களின் வாழ்வே இந்த மண்ணோடு மண்ணுகிவிட்டதே.........ஆண்டவனே"...வசந்தியின் கண்களில் நீர் பீறிட்டெழுந்தது!

அன்று......நள்ளிரவு, வசந்தி யாரும் எதிர்பாராத காரியங்களைச் செய்தாள்!

உடல் நடுக்கும் அந்த நேரத்திலும், குளியல் அறைக்குச் சென்று குளித்துவிட்டு, சரிகையிட்ட வெண்ணிற ஆடையும், வெள்ளைச் சோளியும் அணிந்துகொண்டு, மேகக் கூந்தல்கள் என படரவிட்டுக் கொண்டு வந்த கருங்கூந்தலில், தோட்டத்தில் பூத்திருந்த குண்டு மல்லிகைப் பூக்களை எடுத்துச் செருகிக்கொண்டாள். மங்கலமிழந்திருந்த கைகளில் வளையல்களை எடுத்துச் சூடிஞள். திலகத்தை மறந்திருந்த நெற்றிக்கு ஜவ்வாது வாசனையிட்ட குங்குமத்தை இட்டுக்கொண்டு, புதுமணப் பெண்போல் செம்பஞ்சுக் குழம்பை எடுத்து தனது கைகளிலும், கால் பாதங்களிலும் அள்ளிப் பூசிக்கொண்டாள்!

வானத்துத் தேவதை போவதைப் போல் வசந்தி அப்படியே....தனது வீட்டு வாயில் படியைத் தாண்டி வெறுங்கையினளாய் எங்கோ சென்ருள்......! அதுவரை பெருக்கெடுத்து வழிந்துகொண்டிருந்த கண்ணீர், நின்றிருந்தது!

மறுநாள்—

செய்தித் தாள்களில் கீழ்க்கண்ட பரபரப்பான செய்தி ஊரெங்கும் அல்லோலகல்லோலப் படுத்திக் கொண்டிருந்தது.

மதுரை, மே. 6—

...அவிஞசி கிராமத்தைச் சேர்ந்த வசந்தி என்ற இளம்பெண் மதுரை நெடுஞ்சாலையில் புதிதாக திறக்கப்பட்டுள்ள குணசேகரன் என்பவர் சிலையின் கீழே பிணமாகக் கிடந்தாள்...

...மேற்கொண்டு போலீஸ் புலன் விசாரணை நடந்து வருகிறது.

இந்தி எதிர்ப்பில் குண்டடிப்பட்டு இறந்த மாணவர் செயலாளர் குணசேகரன் சிலையை நமது முதலமைச் அண்ணு திறந்து வைத்தது தெரிந்ததே!......

★

# கொடுவாள் முத்தம்

மதுஉறிஞ்சிக் குடிக்கின்ற சத்தம், பின்பு
மதுக்கோப்பைகள் உருளுகின்ற சத்தம்
விதவிதமாய் நாட்டியத்தை ஆடிக் காட்டும்
வனிதையரின் செம்பாத சதங்கை சத்தம்
எதுவேண்டும் மணிமுத்தா, பொன்னா? என்று
எழில்மங்கையர்மடியில் இறைக்கும் சத்தம்
இதுபோன்ற சத்தம்தான் நித்தம் நித்தம்
எதிரொலிக்கும் பைராம்கான் மண்டபத்தில்!

சோலைகளை பலவிதமாய் அணிந்து பார்க்கும்
சின்ன இடை சிங்காரப் பெண்ணைப் போல,
நீலவிழி கதைவளர்த்து மார்புச் சேலை
நெகிழவிட்டு வலம்நடத்தும் பெண்கள் தம்மை
கோலமலர் மஞ்சத்தில் மாற்றி மாற்றிக்
காமவிழா அரங்கேற்றும் பைராம் கானே
வேலையற்று நதித்துறைக்கு வந்தான் ஓர்நாள்
விளையாடும் இளம்பெண்கள் அழகைக் காண!

இதுவரைக்கும் படிப்பதற்குக் கிடைத்திடாத
இளமேனி இலக்கியத்துச் சொந்தக் காரி
மதுவண்டு மிதிக்காத புதுப்பூ, மீட்டி
மடிமீது சாய்க்காத வீணை, கொத்தி
விதைக்காமல் கிடக்கின்ற தரைமண் போன்று
விளங்குகின்ற ஒருமங்கை, பருவ நங்கை
நதிநீரில் நீந்திவந்து தண்ணீர் முத்தை
நடிக்கவைத்து உடல்மீது வெடிக்க விட்டாள்

பருவம்கொப் பளிக்கும்உடல் வனப்பைச் சேலை
போர்வையிலே மறைப்பதற்குப் புதரை நாடி
சிரிப்பவிழ்க்கும் இதழோடு ஒதுங்கிச் சென்றாள்
சித்திரத்தாள் அடிதொடர்ந்து அவனும் சென்றான்
நெருப்பெடுத்துப் போட்டதுபோல் மனம்விதிர்த்து
நங்கையவள் நடுங்கிநின்றாள் காளை பார்த்து
நிருவாண உடலழகை ரசித்த வாறு
நங்கையினை இழுத்தணைத்தான் மோகத் தோடு!

சப்தமிட்டுக் கூவுதற்கு இதழ்திறந்தாள்
சண்டாளன் தன்இதழால் பூட்டி வைத்துத்
தெப்பம்போல் அவள்உடலில் மிதந்தான், தூக்கித்
தவழவிட்டுக் கரச்சிறையில் துடிக்க வைத்தான்
துப்பிவிட்ட எச்சிலென மங்கை வீழ்ந்தாள்
தடுமாறி பைராம்கான் விரைந்து சென்றான்
ஒப்பில்லாக் கற்பிழந்த அவமானத்தால்
ஒடிந்துமனம் வீடுசென்று சேதி கூறி

அண்ணனவன் பாதத்தில் உயிரை விட்டாள்
அழகுநங்கை காமத்தின் முன்எரிந்தாள்!
எண்ணத்தில் சினநெருப்பு வெடிக்க, அந்த
இழிமகனின் உயிர்முடிக்கத் துடித்தான் அண்ணன்
கிண்ணத்து மதுஊற்றைப் பறித்தல் போன்று
கைப்பற்றினான்அக்பர் ஆட்சி தன்னை
விண்மீது விட்டெறிந்த கல்லாய் வீழ்ந்தான்
விழிமோக வலைவீசும் பைராம் கானே!

மணிமுடியால் சிரம்மூடும் அக்பர், நாளும்
மதுமழையால் முத்தத்தால் குளித்துக் காமப்
பிணியுற்ற பைராம்கான் மக்கா விற்குப்
பயணத்தை மேற்கொள்ள வேண்டுமென்றான்;
இணங்கிவிட்டுக் கத்திமன்னன் கட்டளைக்கு
இளைத்துவிட்ட தன்நிலையை நினைந்த வாறு
துணைப்பரிவா ரம்தொடரச் சென்றான் கட்டில்
தொடர்கதைக்கு இட்டபடி முற்றுப் புள்ளி!

வழிநடுவில் சிலர்சூழ்ந்து நெருங்கி நின்று
விழிமீது ஆத்திரத்தை நிறுத்தி வைத்துப்
பழிகாரன் விரிமார்பை வாளால் தொட்டார்
புடைசூழ்ந்த அவன்வீரர் ஓடிப் போனார்
கொழுந்துமலர் என்தங்கை வாழ்வைக் கிள்ளிக்
குலைத்திட்ட சிற்றின்பக் குரங்கே, இன்று
தொழுதாலும் அழுதாலும் உன்னை நாங்கள்
தப்பிவிட உயிரோடு விடவே மட்டோம்"

எனமுழங்கி ஒருவீரன் பைராம் கானின்
எதிர்நெஞ்சில் தன்வாளை ஓட விட்டான்
நனைத்தபடி அவன்உடலை குருதி வெள்ளம்
நதியாகப் புறப்பட்ட வேகத் தோடு
மனக்கர்வம், மோகவெறிக் கொண்டு நீதி
மறந்துவிட்ட மனிதஉயிர்க் கலந்த தாலே
இனிஅஞ்சி குடிமக்கள் வாழ மாட்டார்
இழந்துகற்பை மங்கையர்கள் சாக மாட்டார்!

மதுமுத்தம் மயல்முத்தம் பெண்ணின் முத்தம்
மனம்மொத்தம் தினம்துய்ந்துக் களிப்ப தற்கு
இதுநித்தம் தவறாமல் எனக்கு வேண்டும்
எதுவேண்டும் இதற்கு? அதைத் தருவேன் என்று
அதிகாரத் திமிராலே கொடுமை செய்து
அன்றாடம் பாவையரைத் துடிக்க வைத்த
சதிகாரன் பைராம்கான் கொடுவாள் முத்தம்
சுவைத்தபடி தரைமீது செத்து வீழ்ந்தான்!

— துறவி —

# ஜூலையில் தொடங்கி ஆகஸ்டில் முடியுமா?

"தேசிய ஒருமைப்பாட்டின் அவசியம் பற்றி அளவுக்கு அதிகமாக இன்றையத்தினம் எடுத்துக் கூறப்பட்டு வருகிறது. 'தேசிய ஒருமைப்பாடு' என்ன என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

"உள்ளபடியே இந்த நாடு ஒருமைப்பாட்டுடன் இருக்குமானல், தேசிய ஒருமைப்பாடு இயக்கம் தேவையே இல்லை. 'ஒன்றுபட்டிருக்கிறோம் — ஒருமைப்பாட்டுடன் இருக்கிறோம்' என்று கூறும் அதே நேரத்தில், 'ஒருமைப்பாடு தேவை' என்று பேசுவது, பொருளற்றது! 'ஒரு நாடாக — ஒருமைப்பாடுள்ள ஒரு நாடாக மாற இருக்கிறோம் — அதற்காக முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறோம்' என்பதை வெளிப்படையாக ஒப்புக்கொள்ள வேண்டும்.

"இந்தியா போன்ற பல்வேறு மொழிகள்—பல்வேறு கலாச்சாரங்கள் — பல்வேறு வாழ்க்கை முறை — சிந்தனைப் போக்குக் கொண்ட ஒரு நாட்டில், ஒருமைப்பாடு என்பது உடனடியாக ஏற்பட்டுவிடக் கூடியதல்ல; அதற்கு நீண்ட நெடுங்காலம் உழைத்தாக வேண்டும்.

"தேசிய ஒருமைப்பாடு என்பது—ஒரு மொழியைத் திணிப்பதாலோ, ஒரு கலாச்சாரத்தைத் திணிப்பதாலோ ஏற்பட்டுவிடாது; அந்த உணர்வு தானாக வீறிட்டெழ வேண்டும்.

"ஒரு பகுதியினர் இன்னொரு பகுதியினருடன் தொடர்பு கொள்ளவும், மாணவர்—ஆசிரியர் போன்ற சமூகத்தின் பல பிரிவினர் நாடெங்குமுள்ள தம்மைப் போன்றோருடன் தொடர்பு கொள்ளவும், கருத்துக்களைப் பரிமாறி ஒத்த கருத்தினராக உருப்பெறவும் தங்குத் தடையின்றி வாய்ப்பு ஏற்படும்போதுதான் ஒருமைப்பாடு ஏற்பட முடியும்."

"இந்தக் காலத்தில் படிக்கும் மாணவர்களுக்கு இத்தகைய வசதிகள் கிடைத்துவருவது பற்றி மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன.

நாங்கள் படிக்கும் காலத்தில், 'கல்வி என்பது ஒரு சில மேட்டுக் குடியினருக்கு மட்டும் உரியது' என்ற நிலை இருந்தது; ஆயிரம்—இரண்டாயிரம் ரூபாய் எனச் செலவழிப்பவர்களுக்குத்தான் அந்தக் கல்விச் செல்வம் கிடைத்து வந்தது; அந்த நிலைமை இப்போது மாறிவருகிறது.

கல்வியறிவு அதிகம் இல்லாத ஒரு நாட்டில் இப்படிக் கல்வித் துறை இருப்பது சனநாயகத்திற்கு விரோதமானது—நியாயத்திற்கு முரணானது!

'கல்வி' என்பது—சாதி, மத, பொருளாதார வேறுபாடுகளைக் கவனியாது அளிக்கப்பட வேண்டிய அடிப்படை — இன்றியமையாத் தேவையாகும்; இதனை நன்கு உணர்ந்து அரசு செயல்படுகிறது.

எனினும். அரசுச் சார்பில்லாத நிறுவனங்களும் இதுபோன்ற கல்விப் பணிகளில் ஈடுபட்டாலன்றி, கல்வித் துறையில் நாம் எந்தவிதமான முன்னேற்றத்தையும் அடைந்துவிட முடியாது.

நமது அரசின் பொது வருமானத்தில் மூன்றில் ஒரு பகுதியைக் கல்விக்கெனச் செலவழிக்கிறோம்; இருப்பினும், கல்வித் தேவையை நம்மால் நிறைவு செய்ய முடியவில்லை.

கல்வி ஆர்வமும், தேவையும் பெருகிவருவது மகிழ்ச்சியளிக்கக்கூடியது; எனினும், மிகுந்த பொறுப்பையும் அது நம்மீது சுமத்துகிறது; அந்தப் பொறுப்பைப் பங்கிட்டுக்கொள்ளத் தனியார் நிறுவனங்கள் முன் வரவேண்டும்.

'புத்தகப் பாங்கி' என்னும் புதுமுறையை இராஜஸ்தான் இளைஞர் சங்கம் கொண்டுவந்திருக்கிறது.

பாங்கித் தொழிலில் இராஜஸ்தானியர் பெரும்பாலும் ஈடுபட்டிருப்பதாலோ என்னவோ—இதுபோன்று ஒரு யோசனை அவர்களுக்குத் தோன்றியிருக்கிறது.

'பாங்கி முறை' என்பது, பொருளாதாரத் தத்துவங்களில் ஒன்றாகும். பணம் ஓரிடத்தில் சேர்ந்துவிடாமல் சமூகம் முழுவதும் சுழல்வதற்குப் பயன்படுவது பாங்கி.

'சமூகம் முழுவதும் பணம் சுழன்று வரவேண்டும்' என்பதற்காகத்தான் முன்பெல்லாம் ரூபாய் வட்டவடிவத்தில் இருந்தது; இப்போது அது சதுர வடிவத்தில் வந்திருக்கிறது!

இரத்தம் எப்படி உடல் முழுவதும் சுழன்று வருவது உடலுக்கு ஆரோக்கியமோ அதுபோல், பணம் சமூகம் முழுவதும் சுழன்று வருவது சமூகத்திற்கு ஆரோக்கியமளிக்கக்கூடியதாகும்! அத்தகைய பாங்கி முறையில் புத்தகங்களை வழங்குவது பாராட்டத்தக்கதாகும்.

தேசிய ஒருமைப்பாட்டிலுள்ள அளவுக்கு மீறிய நம்பிக்கையின் உற்சாகத்தால் சிலர், குறுகிய கால அட்டவணை போட்டு முடிவை எதிர்பார்க்கின்றனர்; ஜூலையில் தொடங்கி ஆகஸ்டு 15–ஆம் நாளுடன் ஒருமைப்பாட்டு பணி முடிந்துவிட வேண்டுமெனக் கருதுகின்றனர்; அது இயலக்கூடியதா?

மொழி, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவைகளில் நிலவும் வேறுபாடுகளை ஓரே நாளிலோ, அல்லது திட்டமிட்டோ நீக்கிவிட முடியாது என்பதை நிச்சயம் அவர்கள் உணரவேண்டும்.

வெறும் மாநாடுகள் கூட்டுவதாலோ சொற்பொழிவுகள் ஆற்றுவதாலோ, கருத்தரங்குகள் நடத்துவதாலோ தேசிய ஒருமைப்பாடு ஏற்பட்டுவிடமுடியாது; மனித குலத்திற்கு நன்மை செய்யவேண்டும் என்ற எண்ணமுள்ளவர்களின் நீண்ட கால சேவைக்குப் பின்னர்தான் தேசிய ஒருமைப்பாடு ஏற்பட முடியுமே தவிர, அரசியல்வாதிகளால் என்றும் ஏற்பட்டுவிட முடியாது.

இராஜஸ்தான் இளைஞர் சங்கம் இங்கு ஏற்படுத்தியுள்ள புத்தகப் பாங்கியைப்போல், தமிழகத்தின் பிற நகரங்களிலும் ஏற்படுத்தி, ஏழை மாணவர்களுக்குப் புத்தகங்கள் தந்துதவுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

இராஜஸ்தான் இளைஞர் சங்கத்தில்
முதலமைச்சர் அண்ணா.

# சோவியத் இரஷ்யாவில் விலைகள் நிர்ணயம்

—செய்யாறு செல்வம் எம். ஏ.,—

சோவியத் இரஷ்யா—என்ற பெயரைக் கேட்டவுடன் உலகெங்கணும் உள்ள உழைப்பாளர்—களுக்கு ஒரு பெருமிதம்; முதலாளித்துவக் கும்பலுக்கு ஒரு பேரிடி. முற்போக்கு சக்திகளுக்கு அது ஒரு கலங்கரை விளக்கம். பிற்போக்கு சக்திகளுக்கு அது ஒரு சிம்ம சொப்பனம். உலகிலேயே முதலாளித்துவ அமைப்புக்குக் கல்லறை கட்டி முதன் முதலில் பொதுவுடைமைச் சமுதாயத்தை நிர்மாணித்த பெருமை சோவியத் இரஷ்யாவைத்தான் சாரும்.

சோவியத் பொருளாதார அமைப்பு, முதலாளித்துவ அமைப்பிற்கு ஓர் அறைகூவலாக மட்டும் விளங்குவதல்ல; முதலாளித்துவ சமூக அமைப்பிற்கு முற்றிலும் முரண்பட்டது அது. சோவியத் இரஷ்யாவில் பண்டங்களின் விலைகள் எப்படி நிர்ணயம் செய்யப்படுகிறது என்பதை நாம் அறிந்து கொள்வதற்கு முன்னால், சோவியத் இரஷ்யாவைப் பற்றிய சில அடிப்படை உண்மைகளை நாம் மனதில் பதிய வைத்துக்கொள்ள வேண்டும். சோவியத் இரஷ்யாவில் உற்பத்தி சாதனங்களான நிலம், உழைப்பு மூலதனம் ஆகியவை முதலாளித்துவ நாடுகளில் உள்ளதைப்போல், தனிப்பட்ட முதலாளிகளின் கையில் இல்லை. அவை அரசின் சொத்தாகவோ, கட்டுப்பாட்டின் கீழோ உள்ளன. எனவே ஒரு பொருளை உற்பத்தி செய்வதும் செய்யாததும் தனிப்பட்ட முதலாளிகளின் விருப்பத்தைப் பொறுத்து இல்லை. அரசாங்கத்தின் விருப்பத்தையே பொறுத்துள்ளது. இரஷ்யாவில் பொருள்களின் உற்பத்தி முதலாளித்துவ அமைப்பில் உள்ளதைப்போல், தனிப்பட்ட முதலாளிகளின் இலாப வேட்கையைத் தணிப்பதற்காக இல்லை; சமூகத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகவே உற்பத்தி நடைபெறுகிறது. இந்த உண்மைகளை மனதில் நிறுத்தி நாம் மேலே பார்ப்போம்.

சோவியத் இரஷ்யாவில் பண்டங்களின் உற்பத்தி அளவானது 'மதிப்பு விதி'யால் (Law of Value) நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு பண்டத்தை உற்பத்தி செய்ய எவ்வளவு சமூக உழைப்பு தேவையோ அந்த அடிப்படையில் ஒரு பண்டமானது வேறொரு பண்டத்திற்கு மாற்றிக் கொள்ளப்படுகிறது. 'மதிப்பு விதி' இயங்க இரு நிபந்தனைகள் உள்ளன. ஒரு பண்டம் உற்பத்தியாவதற்குத் தேவையான தனி மனித உழைப்பு, சமூக உழைப்பாக மாற்றப்பட வேண்டும்; பொருள்களின் தனிப்பட்ட மதிப்பு, சமூக மதிப்பாக (Social Value) மாற்றப்பட வேண்டும். இரண்டாவதாக பண்டமாற்று சரிசமமாக இருக்கவேண்டும். முன் கூட்டி திட்டமிடப்பட்ட விலை நிர்ணயப்படிதான், மதிப்பு விதி இயங்குகின்றது.

மேற்கூறிய இன்றியமையாத நிபந்தனைகளின் மீதுதான், விலைகள் திட்டமிடப்படுகின்றன. விலைகள் தனிப்பட்ட மதிப்புகளின் மீது நிர்ணயிக்கப்படுவது அல்ல; சமூக மதிப்பின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றன.

சோவியத் இரஷ்யாவில், பண்டங்களுக்குப் பல்வேறு வகையான விலைகள் குறிக்கப்படுகின்றன. அவையாவன:-

1. மொத்த விலை
2. ஒரு குறிப்பிட்ட தொழிற்சாலையின் மொத்த விலை.
3. கூட்டுப் பண்ணைகளின் விளை பொருள்களை வாங்கும் விலை.
4. அரசாங்கப் பண்ணைகளின் வெளியீடு விலை.
5. அரசாங்க, கூட்டுறவு வியாபாரத்தின் சில்லரை விலை.
6. கூட்டுறவுப் பண்ணைகளின் மார்க்கெட் விலை.

தொழிற்சாலைகள், தங்கள் ஆலைகளில் உற்பத்தியான பண்டங்களை விற்பனைச் சங்கங்களுக்கு முதலிலே குறிப்பிட்ட பெருமொத்த விலையில் விற்கின்றது. இந்த விலையானது பொருளின் அடக்க விலையோடு ஓரளவு இலாபமும் அடங்கியது.

ஒரே தொழிலில் ஈடுபட்டுள்ள பல்வேறு கிளை ஸ்தாபனங்கள், தங்களுக்குள் இரண்டாவதாகக் குறிப்பிட்ட மொத்த விலையில் பொருள்களை விற்கின்றன. இந்த விலையில் முதலிலே குறிப்பிட்ட பெருமொத்த விலையோடு, திட்டமிட்ட இலாபம், விற்பனைச் சங்கத்தின் நிர்வாகச் செலவு, டர்ன் ஓவர் வரி ஆகியவை அடங்கும்.

கூட்டுறவுப் பண்ணைகள் தங்களின் விளை பொருள்களை அரசாங்கத்துக்கு வாங்கும் விலையில் (Purchasing prices) விற்கின்றன. இவ்விலைகள் இடத்திற்கு இடம் சிறிது மாறுபடும். ஏனெனில் நில வளம், சீதோஷ்ண நிலை ஆகியவற்றின் சாதக, பாதகத்தை அனுசரித்து விளை பொருள்களின் உற்பத்திச் செலவு இடத்திற்கு இடம், பண்ணைக்குப் பண்ணை மாறுபடுகிறது. (உதாரணமாக தமிழகத்தில், வடார்க்காடு மாவட்டத்தில் மின் சக்தியைப் பயன்படுத்தி கிணற்றுப் பாசனத்தின் மூலம் நெற்பயிர் செய்வதற்கும், தஞ்சை மாவட்டத்தில் காவேரி ஆற்றுப் பாசனத்தைப் பயன்படுத்தி நெற்பயிர் செய்வதற்கும், உற்பத்திச் செலவில் பெருத்த வேறுபாடு உள்ளது.) குறைந்த உற்பத்திச் செலவு உள்ள பண்ணை குறைந்த வாங்கும் விலையை நிர்ணயிக்கின்றது. உற்பத்திச் செலவு அதிகமாக உள்ள பண்ணை அதிக வாங்கும் விலையை நிர்ணயிக்கிறது.

இரண்டாவதாகக் குறிப்பிட்ட தொழிற்சாலை பெருமொத்த விலையைப் போலவே, அரசாங்கப் பண்ணைகளின் விளைபொருள்களுக்கு டெல்வி வரி விலை நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் அவை கூட்டுறவுப் பண்ணையின் விளைபொருள்கள் விலையைப்போல் தட்பவெப்ப நிலைக்கேற்றாற்போல் மாறுபடக் கூடியது.

சில்லரை விலை என்பது: அரசாங்க அங்காடிகளிலிருந்தும், கூட்டுறவுச் சங்கங்களிலிருந்தும் மக்கள் பண்டங்களை வாங்கும் விலையாகும். சில்லரை விலையானது திட்டமிட்ட உற்பத்திச் செலவு

தொழிலின் இலாபம், விற்பனை வரி, பெருமொத்த, சில்லரை வணிகச் சங்கங்களின் செலவும் இலாபமும் சேர்ந்ததாகும்.

அடக்க விலை 60 கோபெக்

தொழிற்சாலையின் இலாபம் 20 கோ.

விற்பனை வரி 10. கோ.

பெருமொத்த விற்பனைச் சங்கங்களின் செலவும், லாபமும். 5 கோபெக்.

சில்லரை விற்பனைச் சங்கங்களின் செலவு, லாபம், 5 கோபெக்

பண்டங்களின் மதிப்பைப் பிரதிபலிக்கும் அதன் விலைகளே, பண்டங்களின் மதிப்பில் ஏற்படும் மாற்றங்களைப் பிரதிபலிப்பதாக விளங்குகின்றன. தொழில் உற்பத்தித் திறனில் ஏற்படும் உயர்வு பண்டங்களின் விலையைக் குறைக்க உதவுகிறது. சமதர்ம சமூகத்தின் இந்த விதி, பொருள்களின் விலை கீழ் நோக்கி இறங்குவதிலிருந்து தெறறென விளங்குகிறது. உதாரணமாக சோவியத் இரஷியாவில், 1964-ல் நுகரும் பண்டங்களின் சில்லரை விலைகள், 1955-ல் இருந்த விலை வீதத்தில் 76 சத விகிதமே இருந்தன. சமதர்ம சமுதாயத்தில் நாளடைவில் உற்பத்தித் திறன் பெருகுவதையும், அதன் விளைவாக உற்பத்திச் செலவு குறைவதையும், அதன் முடிவில் விலைகள் குறைவதையும் இது உள்ளங்கை நெல்லிக் கனிபோல் காட்டுகிறது.

விலைகளை நிர்ணயிப்பதில் குறிப்பிட்ட பொருள்களின் உற்பத்தியும் தேவையும் கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுகின்றன. பொருள்களின் உற்பத்தியைவிட தேவை அதிகரிக்கும்போது, விலைகள் ஏற்றப்படுகின்றன. அப்படி ஏற்றுமல் விட்டால் கள்ள வாணிபம் போன்ற விரும்பத்தகாத விளைவுகள் ஏற்படும். விலைகள் ஏற்றப்படுவதோடு, அவற்றின் உற்பத்தியைப் பெருக்கும் முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இதற்கு நேர்மாறாக தேவையை விட உற்பத்தி அதிகரிக்கும்போது, பொருள்களின் விலைகள் குறைக்கப்படுகின்றன. அப்படிக் குறைக்காவிட்டால் பொருள்களின் தேக்கம் ஏற்படுமல்லவா?

சோவியத் இரஷியாவின் பொருளாதாரத்தில் விலை நிர்ணயம் ஒரு முக்கியமான பங்கு வகிக்கிறது. பொருள்களின் உற்பத்தியையும், உபயோகத்தையும் பெருக்கவோ, சுருக்கவோ விலை ஒரு வலிமை மிக்க ஆயுதமாகப் பயன்படுத்தப்படுகிறது.

இப்படி விலைகளை நிர்ணயிப்பதன் மூலம் சோவியத் அரசு சில அடிப்படை சமதர்ம விதிகளின் தேவையைக் கணக்கில் எடுத்துக்கொள்கிறது. அவ்விதிகளாவன: திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சி விதி, தொழில் உற்பத்தித் திறன் வளர்ச்சி விதி போன்றவை.

சமுதாயத்திற்கு அத்யாவசியமாகத் தேவைப்படும் பொருள்களுக்கு உயர்ந்த விலை குறிக்கப்படுகிறது, அப்படி விலையை உயர்த்துவதன் மூலம் அவற்றின் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிக்கப்படுகிறது. சமுகத்திற்குத் தேவையான சில நல்ல பண்டங்கள் சில மூலப் பொருள்கள், ஆகியவை இதில் அடங்கும்.

மக்கள் பொருள்களை வாங்குவதைக் கட்டுப்படுத்தவும் விலை நிர்ணயம் உதவுகிறது. உணவு, உடை போன்ற அத்தியாவசியப் பொருள்களுக்கு, குறைந்த விலைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. மக்களின் உடல் நலத்தைப் பேணும் மருந்துகள், சுகாதாரச் சாதனங்கள் முதலியவும், கல்விச் சாதனங்களான பாடப்புத்தகங்கள் விளையாட்டுக் கருவிகள், குழந்தைகளின் துணிமணிகள், காலணிகள் போன்றவற்றிற்குக் குறைந்த விலைகளே நிர்ணயிக்கப்படுகின்றன. இதற்கு மாருகச் சில பொருள்கள் நுகரப்படுவதைக் குறைக்க, அவற்றின் விலை உயர்த்தப்படுகிறது. மதுபானங்களை மக்கள் அதிகமாகப் பருகுவதைத் தடுக்க, அவற்றின் விலை உயர்த்தப்படுகிறது. 1958ல் இரஷியாவில் ஓட்கா, மது இவற்றின் விலை வெகுவாக உயர்த்தப்பட்டது.

மேற்கூறிய உண்மைகளிலிருந்து ஒரு முக்கியமான கேள்வி எழலாம். தனிப்பட்ட பொருள்களின் விலை அவற்றின் மதிப்பிலிருந்து மாறுபடுவதால், மதிப்பு விதியானது எங்ஙனம் அமுல்படுத்தப்படுகிறது என்ற பிரச்சினை எழுகிறது. ஒரே மதிப்புள்ள இரு பொருள்களுக்கு வெவ்வேறு விலை குறித்திருக்குமானுல், சரி சமமான பண்டமாற்றம் இருக்காதல்லவா? இந்தக் கேள்விக்குரிய பதில் இதுதான்.

மதிப்பு விதியானது, ஒவ்வொரு தனிப்பட்ட பொருளுக்கு மட்டும் பொருந்தியது அல்ல. பொருளாதாரத்தில் உற்பத்தியாகும் எல்லா பொருள்களின், மொத்த மதிப்பும் மொத்த விலையும் சரிகட்டிக் கொள்ளவேண்டும்.

ஒரு பொருளின் தேவைக்கும் உற்பத்தி அளவுக்குமிடையேயிடைவெளி இருக்கும்போது, உற்பத்தி குறைவாக உள்ள பொருள்களுக்கு அதிக விலையும் தேவை குறைவாக உள்ள பொருள்களுக்குக் குறைந்த விலையும் நிர்ணயிப்பதன் மூலம், பொருள்களின் விலையும் மதிப்பும் சரி சமமாக வைத்துக்கொள்ளப்படுகிறது

மேற்கூறிய முறையிலல்லாமல், திட்டமிட்ட பொருளாதார வளர்ச்சியை முன்னிட்டு, அரசாங்கத்தால் மதிப்புக்கு மாறுபட்டு பொருளின் விலை நிர்ணயிக்கப்படுகின்றபோது, பொருள்களின் மொத்த மதிப்பும், மொத்த விலையும் வேறு வகையில் சரிகட்டப்படுகிறது, உதாரணமாக மக்களின் அத்தியாவசியத் தேவைகளான உணவுப் பொருள்கள், துணி முதலியவற்றிற்கு அரசு மதிப்பை விடக் குறைந்த விலையை நிர்ணயிக்கும்போது, நகை நட்டுகள், வாசனைப் பொருள்கள் போன்ற ஆடம்பரப் பொருள்களுக்கும், மது வகைகளுக்கும் விலையை உயர்த்திவிடுகின்றது.

முதலாளித்துவத்தில் பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கும், சமதர்மசமூகத்தில்பொருள்கள் உற்பத்தி செய்யப்படுவதற்கும்அடிப்படையில் வேற்றுமை இருக்கிறது முதலாளித்துவ உற்பத்திக்கு மூலச் சக்தியாக விளங்குவது பொருளின் மிஞ்சிய மதிப்பை முதலாளிகள் எடுத்துக் கொள்வதாகும். எந்தப் பொருளுக்கு கிராக்கி அதிகமாக இருக்கின்றதோ அந்தப் பொருளை உற்பத்தி செய்வதில் மேலும் அதிகமான முதலீடு செய்யப்படுகின்றது.

ஆனுல் சமதர்ம சமூகத்தில், அடிப்படைப் பொருளாதார விதி வேறுவிதமாக இயங்குகின்றது. நிலம் உழைப்பு, மூலதனம் போன்ற உற்பத்திச் சாதனங்கள் இலாபகரமான தொழிலில் ஈடுபடுத்தப்படவில்லை. மக்களின் நலனைப் பேணும் வகையில், சமதர்ம உற்பத்தியைப் பெருக்கும் வழிவகைகளில் செலுத்தப்படுகிறது. சமதர்மத்தில் பொருளின் உற்பத்தியானது அதற்கு இருக்கும் கிராக்கியைப் பொறுத்து நடப்பதில்லை. பொருளினுல் மக்களுக்கு ஏற்படும் நன்மையைக் கருத்தில்கொண்டே உற்பத்தி நடைபெறுகிறது. திட்டமிட்ட சரிசமமான பொருளாதார வளர்ச்சி விதியின் அடிப்படையிலேயே பொருள்களின் உற்பத்தியும், விலையும் தீர்மானிக்கப்படுகிறது. ●

# ஆங்கிலக் கவி கீட்ஸ்

ஆங்கிலக் கவி ஜான் கீட்ஸ் ஒரு கவிதா தீபம். அவனுடைய கவிதை யொளி இலக்கிய வானில் என்றும் பிரகாசமாய் மின்னிக் கொண்டிருக்கும். மிகக் குறுகிய காலங்களே இவ்வுலகில் வாழ்ந்த இந்த இளங் கவியின இதயத்திலிருந்து ஊற்றெடுத்துப் பெருகிய கவிதை வெள்ளம் ஜீவ நதியாய்ப் பொங்கி வழிந்து இலக்கியச் சோலையை வளப்படுத்திற்று.

உண்மைக் கவிஞனின் இதயம் அழகு மயமானது. அவனுக்கு அழகுதான் கவிதை. கவிதை தான் உண்மை. இதனை உணர்ந்துதான் 'துரும்பிலும் கூட உள்ளும் புறமும் அழகு உண்டு' என்று கம்பீரமாய்க் குரல் எழுப்பிப்பாடுகிறான் கீட்ஸ்.

அவனது 'எண்டிமியான்' என்னும் 4000-வரிகளில் அமைந்த பாடலில் காவிய நடையும், கற்பனை ஆழமும் தேங்கிக் கிடக்கிறது. இளைஞன் எண்டிமியான் அழகுத் தெய்வத்தைக் கண்டு பெண் தேவதையைக் காதலித்து, தொடர்ந்து சென்று திரும்பி வருவதாக அமைந்துள்ள இக் கற்பனைக் கதை 'அழகே நித்திய ஆனந்தம்' என்ற அழகிய பல்லவியோடு ஆரம்பமாகிறது. இயற்கையின் எல்லையில்லாப் பேரெழிலையும் காதல் வாழ்வின் இன்ப துன்பங்களையும் வெகு அருமையாகச் சித்திரிக்கிறான் கவி கீட்ஸ்.

கீட்ஸைப்போல் அவனுக்குப் பின் வந்த கவிகள் யாரும் கவிதை புனையவில்லை. வேறெந்தக் கவியாலும் பின்பற்ற முடியாத கலைப் பண்பு வாய்ந்த நளின நடை அவனுக்கென்றே வாய்த்திருந்தது. 1819-ல் அவன் எழுதிய 'குயில் பாட்டு' நளினமான அழகுகள் நிறைந்த ஒரு காவியச் சித்திரமாகும். "எவ்வித முயற்சியுமின்றி இசை வெள்ளத்தை வாரிக் கொட்டும் குயிலின் பாட்டைக் கேட்கும்போதே அந்த இன்பத்தில் தன் உயிரையே விடுவது நலம்'' என்று சிந்திக்கிறான் அந்த மகாகவி.

"மனித வாழ்க்கையில் கவிதையும் இசையும் தொடர்ந்து தோன்ற இடமில்லை; மனிதன் சாகப் பிறந்தவன். இசைக் குயிலோ பாடிப் பாடி அமர நிலையை அடைந்துவிட்டது. அழியாத இசை வடிவத்தில் வாழ்கிறது அந்தக் கானப் புல்''— இவ்வாறு 80 வரிகளில் குயிலின் கீதத்தை தன் கவிதையிலே கேட்கும்படிச் செய்து விட்டான் கீட்ஸ். பாரதியின் 'குயில் பாட்டு'போல கீட்ஸின் கீதங்கள் சிந்தனை விண்ணில் சிறகடித்துப் பறக்கின்றன.

'உறக்கமும் கவிதையும்' என்ற தனது ஒப்பற்ற படைப்பில், "வாழ்க்கை ஒரு நொடியே. அது கடலின் பேரலையில் சுழலுகின்ற தோணியின் நிலயாமை போன்றது, அடிக்கடி மாறிச் செல்கின்ற கதை போன்றது. பெண்ணின் முகத்திரை லேசாக எடுபட்ட நிலைபோன்றது. கவலையற்ற சிறுவன் மரக்கிளைகளில் துணிந்து சிரித்துக் கொண்டு ஊஞ்சல் ஆடுவது போன்றது'' என்று நிலையற்ற இவ்வுலக வாழ்வை எள்ளி நகையாடுகிறான் கீட்ஸ். இதே பாட்டில், கவிதையின் உண்மைச் சிறப்பை வற்புறுத்தி போலிக் கவிதைகளின் போக்கினைச் சாடுகிறான் நம் கவி.

அவனது சிந்தனைச் சுரங்கத்திலிருந்து பிறந்த 'புகழ்', 'இஸபெல்லா', 'பூனைப்பாட்டு', 'மனித வளர்ச்சியின் பருவங்கள்', 'துக்கம்', ஆகிய கவிதைச் செல்வங்கள் என்றும் அழியாதவை. 1795 அக்டோபர் 29-ல் இலண்டனுக்கருகில் பிறந்து வளர்ந்த கீட்ஸ் 1821-ல் அமர நிலயடைந்தான்.

உண்மையான கவிக்கு என்றுமே மரணமில்லை. கீட்ஸின் கவிதைகளும் புகழும் மரண எல்லையைக் கடந்தவை. சாகுந்தருவாயிலும்கூட கவி தாகூரைப்போல மரணத்தைப் பற்றியும் கவிதை பாடியவன் கீட்ஸ். அவன் இவ்வுலகில் வாழ்ந்த காலங்கள் மிகவும் சொற்பம். ஆனால் அவனது இதயத்தில் மலர்ந்த இனிய காவியங்கள் மகத்தானவை. அவன் ஆக்கிவைத்த அழியாக் கவிதைகளில் அவனது இதயக்குரல் என்றும் ஒலித்துக்கொண்டே இருக்கும்.

கீட்ஸின் இறப்பைப்பற்றி மற்றொரு ஆங்கிலக் கவிதா மேதையான ஷெல்லி

"Life like a dome of many-coloured glass
Stains the white radiance of Eternity."

என்று பாடியுள்ள வரிகள் இதயத்தைச் சிலிர்க்க வைக்கின்றன. உயர்ந்த உண்மைகளை காவியச் சித்திரங்களாகத் தீட்டி மகிழ்ந்த அந்த உன்னத கவி இன்று நம்மிடையே இல்லை. கீட்சுக்குப் பிறகு வேறொரு கீட்ஸ் இன்னும் பிறக்கவும் இல்லை.

—எஸ். டி. போஸ்

★

## விண்ணில் கலந்திடுமே!

சுட்டி அழைப்பதிலே—சுவைச்
சொட்டும் அழகியடி!
வட்டக் கருவிழியில்—கலக்
கொட்டிக் கிடக்குதடி!
பட்டுத் திருமேனி—நீர்
பட்டுத் தெரிக்குதடி!
கட்டுக் கருங்கூந்தல்—மலர்
மொட்டும் சிரிக்குதடி!
சிட்டுக் குருவியென—மனச்
சிறையில் பூட்டிடுவேன்!
கட்டி அணைத்திடவே—மனக்
கட்டில் இருக்குதடி!
எட்டிப் பிரியாமல்—தினம்
ஏங்கித் தவிக்காமல்
ஒட்டும் உறவாலே—இதழ்
ஊறிடும் தேன் தருவாய்!
விட்டுப் பிரிவாயோ—மனம்
வேதனைத் தாங்கிடுமோ?
விட்டுப் பிரிந்திடுமே—உயிர்
விண்ணில் கலந்திடுமே!

—எம். எஸ். மணி

# ஏன் முடியாது இந்தியாவில் மட்டும்?...

“மாண்புமிகு மன்றத் தலைவர் அவர்களே! மொழி உரிமை கோரி—தாய் மொழியில் பேசுவதற்கான ஒத்த உரிமையும் ஒத்த வாய்ப்பும் கேட்டு—நான் கொண்டுவந்த அரசியல் சட்டத் திருத்த மசோதாவுக்கு எல்லாக் கட்சியினரும் —பேசிய எல்லா உறுப்பினரும்—சிவநாராயண், உள்துறை அமைச்சர் ஆகிய இருவர் தவிர மற்ற அனைவரும் முழுமனதாக வரவேற்றுப் பேசியதற்கு என் வணக்கத்தை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்; அவர்கள் தந்த ஆதரவை மதிக்கிறேன்;

ஆர்வமிக்க பேச்சைக் கேட்டு மகிழ்கிறேன்; தாய்மொழி உரிமைக்கு அவர்கள் காட்டிய அக்கறைக்காக—கட்சி வேறுபாடு இன்றி தந்த கருத்துரைக்காக—அவர்களுக்கெல்லாம் எனது நன்றியறிதலை—வணக்கத்தை எனது தாய்மொழியாம் தமிழிலேயே தெரிவித்துக் கொள்கிறேன்.”

நன்றியைத் தமிழில் தெரிவித்து, பிறகு தோழர் செழியன் ஆங்கிலத்தில் பேசத் துவங்கினார்:–

“மன்றத் தலைவர் அவர்களே! இந்த மசோதாவிற்கு ஆதரவு தந்த கட்சியினருக்கும் உறுப்பினருக்கும் என் இதயங் கனிந்த நன்றியை இதயத்திலிருந்து கிளம்பும் என் தாய் மொழியில் தெரிவித்தேன். எந்த உரிமைக்காக நான் இந்த மசோதாவைக் கொண்டு வந்தேனோ அந்த உரிமையை மதித்து என் தாய் மொழியில் பேசினேன்.

மசோதாவைக் கொண்டு வந்தவன் என்ற முறையில், நடந்த விவாதத்துக்குப் பதிலளிக்கும் கட்டத்தில் நான் நிற்கிறேன்.

இந்த மசோதாவுக்கு அரசாங்கச் சார்பில் அக்கறை காட்டவேண்டிய அமைச்சரை இந்த மன்றத்தில் காணோம். இது சரியா? பொறுப்பான செயலா?

மக்களின் கவனத்தையும், மன்றத்தின் பல பகுதியினர் ஆர்வத்தையும் கவர்ந்த ஒரு முக்கிய மசோதாவில், அமைச்சர் இங்கு இல்லையே .........”

தோழர் கந்தப்பன்:– ‘அமைச்சர் வெளியேறியது சரியாகுமா?”

---

நாடாளுமன்றத்தில், மன்ற உறுப்பினர் தாய்மொழி மூலமே பேசுவதற்கு அரசியல் சட்ட உத்திரவாதம் கோரி திரு. சழியன், M. A M . கொண்டுவந்த தனி நபர் மசோதா தள்ளுபடி செய்யப் பட்டுவிட்டது. அந்தச் சோக முழக்கமே இது.

---

அவைத் தலைவர்.– “அமைச்சர் திரும்பி வந்துவிடுவார்.”

தோழர் கந்தப்பன்:– “அதுவரையில் விவாதத்தை ஒத்திப் போடலாமா?”

தோழர் செழியன்:– “யாருக்காக நான் வாதங்களை — பதிலை முன் வைக்க வேண்டுமோ அவர் இங்கு இல்லையென்றால், இந்த விவாதம் அர்த்தமற்றதாகிறது.”

அவைத் தலைவர்:– “இந்தப் பிரச்சினையில் சம்பந்தப்பட்ட அமைச்சர் இங்கு இருந்து, தரும் பதிலை கவனிக்கவேண்டும், அப்படி இல்லாதது, சரியானது அல்ல — முறையற்றது!

இரா. செழியன்;– ‘இந்த விவாதத்தில் கலந்துகொண்ட அனைவரும் — சிவநாராயண், அமைச்சர் ஆக இருவர் தவிர, மற்றவர்கள் அனைவரும் — ஆதரித்துப் பேசினார்கள். காங்கிரசுத் தரப்பில் பேசிய போகரா, சிந்தாமணி பானிக்கிரகி, ரன்தீர் சிங் ஆகியோர் ஆதரித்துப் பேசினர்......

ஓர் உறுப்பினர்;- “சேத்கோவிந்த தாஸ்கூட!”

இரா. செழியன்:— “அதையும் நான் மறந்துவிடவில்லை.”

விவாதத்தைத் துவங்கிய நேரத்தில், 1927-ல் சேத் கோவிந்த தாஸ் கொண்டுவந்த தனி நபர் தீர்மானம் பற்றிக் குறிப்பிட்டேன்.

அப்பொழுது ஆங்கில ஆட்சியில் இருந்த மத்திய சட்டசபையில், ‘ஆங்கிலத்துடன், இந்தி, உருது ஆகிய மொழிகளுக்கும் இடம் தர வேண்டும்’ என்று சேத் கோவிந்த தாஸ் ஒரு தீர்மான மூலம் வலியுறுத்தினர். அந்தத் தத்துவத்தை -- தர்க்கத்தைச் சற்று விரிவடையச் செய்து, இந்தியல்லாத மற்ற இந்திய மொழிகளுக்கும் இந்த மாமன்றத்தில் நான் இடம் கேட்கிறேன். எனது கோரிக்கையை சேத் கோவிந்த தாஸ் ஆதரித்தது எதிர் பார்க்கவேண்டிய ஒன்றேயாகும்.

முதலில் நான் குறிப்பிட்டது போல, இந்தியாவில் உள்ள மொழிப் பிரச்சினை முழுமையாகவோ ஆட்சி மொழிப் பிரச்சினையின் தன்மையை விரிவான வகையிலோ ஆராய நான் முன்வரவில்லை.

இந்த மசோதாவில் ஒரு குறிப்பிட்ட பிரச்சினையே முன்வைக்கப்பட்டுள்ளது; ‘நாடாளுமன்றத்தில் எந்த மொழிகளை வழங்க அரசியல் சட்டப்படி நாம் அனுமதிக்கலாம்’ என்பது தான் அது!

பக்கத்திலுள்ள இலங்கைத் தீவுக்குச் சென்றால்—அங்குள்ள நாடாளுமன்றத்தில் — தமிழ் உறுப்பினர்கள் தமிழில் பேச அனுமதிக்கப்படுகிறார்கள்; அவர்கள் பேசுவது அப்படியே குறிப்பேட்டில் இடம் பெறுகிறது.

சிங்கப்பூருக்குச் சென்றால் அங்கே சீன மொழி – மலேசிய, மொழி – தமிழ், ஆங்கிலம் ஆகிய நான்கு மொழிகளும் அனுமதிக்கப்படுகின்றன; மலேசியாவிலும் இதே போல தமிழுக்கு இடம் தரப்படுகிறது.

இலங்கையில் — மலேசியாவில் – சிங்கப்பூரில்-தமிழுக்குக் காட்டப்படும் மதிப்பு – தரப்படும் உரிமை இந்தியாவில் காட்டப்படவில்லை; இந்த மாமன்றத்தில் தரப்படவில்லை!

சின்னஞ் சிறு இடமாக உள்ள சிங்கப்பூரில் நான்கு மொழிகள் அனுமதிக்கப்படுகின்றன — அங்குள்ள நாடாளுமன்றத்தில்!

ஆனால், பெரிய இந்தியாவில் – ஒரு துணைக்கண்டம்போல் பரந்து கிடக்கும் இந்தியாவில் –– இரஷ்யாவை விட்டு மற்ற ஐரோப்பா முழுவதையும் தன்னுள் அடக்க வல்ல நிலப்பரப்பை உடைய இந்தியாவில்—15 மொழிகளுக்கு இடம் தரப்படவில்லை. ஏன்? தரமுடியாதா தரக்கூடாதா? தருவதற்கான பெருந்தன்மை உங்களிடமில்லையா? உரிமையைப் பெறுவதற்கான தகுதி எங்களுக்கு இல்லையா?

அரசாங்கச் சார்பில் குறுக்கிட்ட அமைச்சர் சுக்லா அவர்கள் ஒன்றை

வெளிப்படையாகக் கூறிவிட்டார்—'நடைமுறையில் இதைச் செயல்படுத்த முடியாது' என்று அவர் கூறவில்லை — இந்த 'மசோதாவை நிறைவேற்றிவிட்டால், அதைச் செயல்படுத்துவது முடியாத காரியமல்ல' என்கிறார் ஆக எது தடையாக இருக்கிறது?

'இந்த மசோதாவின் அடிப்படைக் கொள்கையை ஒத்துக்கொள்ளவில்லை' என்றார்.

'எல்லாத் தேசிய மொழிகளுக்கும் ஒத்த வாய்ப்பு இங்கு தரப்பட வேண்டும்' என்று இந்த மன்றத்தில் பெரும்பான்மையினர் ஆதரித்ததை அவர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்.

நடைமுறையில் உள்ள சங்கடங்களைக் காட்டி அவர்களால் தப்பித்துக்கொள்ள முடியாது.

சோவியத் இரஷ்யாவில் 18 மொழிகள் பேசப்பட வாய்ப்பு இருக்கிறது என்பதை பேராசிரியர் இரேன் முகர்ஜி சுட்டிக் காட்டினர்.

கன்னடத்தில் பேசிய நண்பர் படேல், 'சுழல் மாடம் கட்டுவதற்கும், குளிக்கும் அறை அமைப்பதற்கும், மற்றும் எவ்வளவோ வகைகளில் வெளிநாட்டினரைப் பார்த்து வீண்செலவு செய்யும் இந்த அரசாங்கம், சோவியத் அரசாங்கம் செய்வதைப் பார்த்து ஏன் 13 மொழிகளுக்கும் இந்த மன்றத்தில் உரிமை தரக்கூடாது' என்று கேட்டுக்கொண்டார்.

கனம் அமைச்சர் அளித்த பதிலில் குழப்பம் இருக்கிறது......

ஓர் உறுப்பினர்:—"முழுக்க முழுக்கக் குழப்பம்!"

இரா. செழியன்:—"அதனால்தான் அங்கு இருக்கிறாரோ என்னவோ தெரியாது!

'அரசியல் சட்டப்படி, இப்பொழுதும் ஒருவர், தம் தாய் மொழியில் பேசலாம்' என்றார். அரசியல் சட்டத்தைச் சரியாக அவர் பார்க்க வேண்டும்.

"நாடாளுமன்றத்தில், இந்தி அல்லது ஆங்கிலம் பயன்படுத்தப்பட வேண்டும்; இந்தி அல்லது ஆங்கிலத்தில் தெளிவாகப் பேசும் ஆற்றல் ஒருவருக்கு இல்லையென்று ஏற்பட்டால், அவருடைய தாய்மொழியில் அவர் பேச அவைத் தலைவர் அனுமதி தரலாம்" என்று இருக்கிறது.

இதில் இரண்டு முக்கியப் பகுதிகள் இருக்கின்றன. காங்கிரசுத் தரப்பிலிருந்து ரண்தீர்சிங் இந்தியில் பேசினர்; அவர் ஒரு வழக்குரைஞர்; இந்தி, ஆங்கிலம் இரண்டும் அவருக்குத் தெரியும்; சில சமயங்களில் அவர் இந்தியில் பேசுகிறார்; சில சமயங்களில் ஆங்கிலத்தில் பேசுகிறார். இன்றைக்கு அவர் இந்தியில் பேசினர்.

இந்தி — ஆங்கிலம் இரண்டும் தெரிந்த ஒருவர், இந்தியிலோ, ஆங்கிலத்திலோ பேசலாம்; அது அரசியல் சட்டப்படி உள்ள உரிமை!

எனக்கு தமிழ், ஆங்கிலம் இரண்டும் தெரிகிறது என்றால் எனக்குத் தமிழில் பேசும் உரிமை கிடையாது—ஆங்கிலத்தில் மட்டும்தான் பேசியாக வேண்டும்!

இந்திக்காரர்களுக்கு உள்ள வாய்ப்பு—உரிமை மற்ற மொழிக்காரர்களுக்கு ஏன் தரக்கூடாது?

இரண்டாவதாக—இந்தியில் ஆங்கிலத்தில் பேசத் தெரியாதவர்கள் தமது தாய்மொழியில் பேச அவைத் தலைவரால் அனுமதிக்கப்படலாம்.

இந்தி அல்லாத மொழியினர் தமது தாய்மொழியில் நேரடியாகப் பேச முடியாது.

மற்ற இரண்டு மொழிகளும் தெரியாது என்றால்தான் அந்த அனுமதி கிடைக்கும்; ஏன் இந்தப் பாகுபாடு?

அவைத் தலைவரின் பெருந்தன்மை—நேர்மையான மனப்பான்மை—இவற்றின் உதவியால் ஒருவருக்கு அனுமதி கிடைக்கலாம், நான் கேட்பது அனுமதி அல்ல—உரிமை!

என் தாய்மொழியில் என் கருத்தைத் தெரிவிக்கும் உரிமை எனக்கு அரசியல் சட்டப்படி தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நான் பேசுவது மற்றவர்களுக்கும் புரியவேண்டும்; இல்லையாயின், நான் பேசுவதில் அர்த்தமில்லை!

தேசிய மொழிகள் அனைத்துக்கும் ஊக்கம் தருவதாக அமைச்சர் கூறினர், மத்திய அரசாங்கத் தேர்வுகளில் 15 தேசிய மொழிகளுக்கும் இடம் தரப்போவதாக அமைச்சர் எடுத்துக் காட்டினர்.

மத்திய அரசாங்கத்தில் வேலை பார்க்க வருபவர்களைத் தேர்ந்தெடுக்க அந்தப் பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. அந்தப் பரீட்சைகளில் 15 மொழிகளும் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அதற்காக நாங்கள் போராடியுள்ளோம், இந்த மன்றத்தில் நான் அதற்காக வாதாடி இதே அமைச்சர்களிடமிருந்து உறுதிமொழி பெற்றேன்.

மத்திய அரசில் பணியாற்ற வருபவர்களுக்கு 15 தேசிய மொழிகளிலும் வாய்ப்புத் தரப்படுகிறது: அவர்களுக்குத் தரப்படும் வசதியை, நாடாளு மன்ற உறுப்பினர்களுக்குத் தரக்கூடாதா?

பத்து இலட்சம் மக்களுக்குப் பிரதிநிதியாக வரும் நாடாளு மன்ற உறுப்பினர் என்ன தவறு செய்துவிட்டார் — உங்கள் தண்டனைக்கு ஆளாக?

"இந்தி ஆட்சி மொழி; ஆங்கிலம் துணை ஆட்சி மொழி; இந்த இரண்டையும் தவிர மற்ற மொழிகளையும் நாடாளுமன்றத்தில் அனுமதித்தால் 15 ஆட்சிமொழிகள் வந்துவிடும்" என்று கனம் அமைச்சர் ஒரு விசித்திர வாதத்தைக் கிளப்பினர்.

இரண்டு ஆட்சிமொழிகளை வைத்துக்கொண்டுள்ள மத்திய அரசில் பணிபுரிய வருபவர்களைத் தேர்ந்தெடுக்கும் பரீட்சையில் 15 மொழிகளை அனுமதிக்கிறார்களே — அங்கு மட்டும் ஆட்சிமொழிகள் 15-ஆகப் பெருகிவிட்டதா?

அங்கு 15 மொழிகளை அனுமதிக்க எவ்வளவு நியாயம் இருக்கிறதோ அதைவிட அதிகமான நியாயம் இந்த மன்றத்தில் 15 மொழிகளை வழங்க இருக்கிறது...

பேராசிரியர் இரேன் முகர்ஜி:- "ஓர் ஒழுங்குப் பிரச்சினை: சம்பந்தப்பட்ட அமைச்சர் அங்கே இல்லை. மற்ற துறையினர்—யார் யார் எந்தத் துறையில் அமைச்சர் என்று தெரியாது – இங்கு இருக்கலாம்; ஆனலும் உள்துறையைச் சேர்ந்த அமைச்சர், துணையமைச்சர் யாராவது ஒருவர் இங்கு இருந்து, விவாதத்தைக் கவனிக்க வேண்டாமா?"

அவைத் தலைவர்:- "உள்துறை அமைச்சர் ஒருவராவது இங்கு இருந்திருக்க வேண்டும்."

ஓர் உறுப்பினர்:- "சட்டப் பிரிவைச் சேர்ந்த துணையமைச்சர் இங்கு இருக்கிறார்."

இரா. செழியன்:- "இது உள்துறை அமைச்சரால் கவனிக்கப்பட வேண்டிய பிரச்சினை; வேண்டுமானல், நான் என் பேச்சை நிறுத்திக்கொள்கிறேன். பிறகு அவர் வந்ததும் தொடங்கலாம்."

இரேன் முகர்ஜி;- "உள்துறை அமைச்சர்—ஒரு மாநில அமைச்சர்—ஒரு துணை அமைச்சர்— இவர்களில் ஒருவர்கூட இங்கு ஏன் இல்லை?"

துணைத் தலைவர் - "அவையை எப்படி மதிக்கிறீர்கள் என்பது முக்கியப் பிரச்சினை; தனிப்பட்ட பிரச்சினை அல்ல"

திரு. அன்பழகன்:- "துணைத் தலைமை யமைச்சர் வந்துள்ளார். மசோதாவின் கருத்தை அவர் ஒப்புக்கொண்டால், விவாதத்தை விரைவில் முடித்துக் கொள்ளலாம்."

துணைத் தலைவர்:- "துணைத் தலைமை யமைச்சர் இங்கு இருப்பது போதும்; விவாதத்தை முடிக்கலாம்."

மொரார்ஜி தேசாய்:- "நான் ஒரு துணை அமைச்சராகப் பணியாற்றுவேன்."

இரா. செழியன்:- "துணைத் தலைமை யமைச்சர், பதவியில் உயர்ந்தவர்; ஆனால், துணை அமைச்சருக்கு-உள்துறைத் துணை அமைச்சருக்கு - ஈடாக அவரை ஆக்கவேண்டாம்; இந்தப் பிரச்சினையில் உள்துறைப் பிரிவைச் சேர்ந்த அமைச்சர் யாரேனும் இருக்க வேண்டும்."

துணைத் தலைவர்:- துணைத் தலைமை யமைச்சர் இருக்கிறார் - அது போதுமே"

தென்னேட்டி விசுவநாதன் :- "பிரச்சினை அவ்வளவு சுலபமானதல்ல; உள்துறை அமைச்சர் சுக்லா தமது பேச்சை முடித்துக்கொண்டதும் ஒன்றும் சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறிவிட்டார்; அது பற்றி இங்கு கேள்வி பிறந்ததும் காங்கிரசுக் கொறடா வெளியே சென்று ஆள் தேடினர்; 'முதலில் இந்தப் பக்கம் தென்படுகிற ஆண்மகனை என் இளவரசிக்கு மணம் முடிக்கிறேன்' என்று கதைகளில் வருவதைப்போல் வெளியே முதலாவதாக கிடைத்த அமைச்சரை உள்ளே அழைத்து வந்தார்; இது முறையான செயல் அல்ல — அவையை அவமதிப்பதாகும்."

துணைத் தலைவர்:— "உள்துறைத் துணையமைச்சர் இப்பொழுது வந்து விட்டார்."

இரா. செழியன்:— "எப்படியோ ஒரு உள்துறை அமைச்சரைக் கொண்டுவந்துவிட்டார்கள்; அவருக்கு இந்தப் பிரச்சினையின் முழு விவரம் தெரியும் என்ற நம்பிக்கையில் நான் தொடருகிறேன்.

அரசியல் சட்டப் பிரிவையும், மொழிபெயர்ப்பு வசதியையும் சிலர் பிணைத்துப் பேசினர்.

ஒன்றுக்கொன்று பின்னப்பட்டதல்ல—அரசியல் சட்டம் 1950-ல் இயற்றப்பட்டது—அப்பொழுது இந்தி ஆங்கிலம் இரண்டையும் நாடாளுமன்ற மொழிகளாக 120-வது பிரிவில் எழுதிவைத்தார்கள்.

ஒரே சமயத்தில் மொழிபெயர்க்கும் வசதி இரண்டு ஆண்டுகளுக்கு முன்புதான் கிடைத்தது; 15 ஆண்டுகளாக அந்த வசதி இல்லாதிருந்தது.

அரசியல் சட்டத்தில் வகுக்கப்பட்ட மொழிகளுக்கும் — மொழிபெயர்ப்புக்கும் தொடர்பு கிடையாது. ஆக, இந்த மசோதாவுக்கும் மொழிபெயர்ப்பு முறைக்கும் தொடர்பு கிடையாது.

மொழிபெயர்ப்பு முறையை நமது வசதிக்கேற்றப்படி—தொழில் நுட்ப முறைக்கு ஏற்றபடி நாம் வகுத்துக் கொள்ளலாம்.

இப்பொழுதுள்ள இயந்திர நுட்பங்களை வைத்து, முதலாவது இப்படி ஆரம்பிக்கலாம். அரசியல் சட்ட 120வது பிரிவில், 15 தேசிய மொழிகளுக்கும் இடம் தரலாம்; அதன்படி, இங்குள்ள உறுப்பினர்கள் தமது தாய்மொழியில் பேசும் உரிமை கிடைக்கிறது.

ஆரம்பத்தில் இப்பொழுதுள்ள முறையை வைத்து. ஆங்கிலம்—இந்தி ஆகிய இரண்டு மொழி பெயர்ப்புகளையும் பயன்படுத்தலாம்.

துணைத் தலைமையமைச்சர்:— "இது ஆரம்பம்."

செ. கந்தப்பன்:— "நீங்கள் அங்கே இருக்காமல் போகலாம்; நாங்களும் வராமல் இருக்கலாம்; ஆனால், ஒரு முறையை ஆரம்பித்து வைக்கலாம்."

இரா. செழியன்:—"ஆரம்பத்தில் இப்படிச் செய்து, பிறகு மற்ற மொழிகளுக்கும் அந்த மொழிபெயர்ப்பு முறையை விரிவுபடுத்தலாம்.

'மொழிபெயர்ப்பு' என்பது, தரப்படும் உரிமையைச் சரியாகப் பயன்படுத்தும் முறை; நான் கேட்பது—அந்த உரிமையை!

அரசியல் சட்டத்தின் 120-வது பிரிவு திருத்தப்படாத வரையில் இந்தி பேசாத மற்றவர்களுக்கு அந்த உரிமை கிடையாது!

என் மொழியில் பேச—என் தாய் மொழியில் என் கருத்துக்களைக் கூற உரிமை கேட்கிறேன்—நீதி கேட்கிறேன்! இந்திய சனநாயகத்தின் உச்சக்கட்டமாக விளங்கும் இந்த மாமன்றத்தில் அரசு உரிமைக்கு இடம் கேட்கிறேன்!

உள்துறைத் துணை அமைச்சரைப் பார்த்துக் கேட்கிறேன் — இந்த மசோதாவை ஒப்புகொள்ளுங்கள்' என்று!—நடைமுறை விவரங்களைப் பிறகு விவாதித்து முடிவு செய்யலாம்.

[உள்துறைத் துணையமைச்சர் திரு. கே. எஸ். இராமசாமி பதில் கூருமல் பேசாது இருந்தார்.]

இரா. செழியன்:- "துணைத் தலைமையமைச்சரைப் பார்த்துக் கேட்கிறேன் — 'என் மசோதாவின் நோக்கத்தை கொள்கையளவிலாவது ஏற்றுக்கொள்ளுங்கள் என்று; நடைமுறையில் இடையூறுகள் இருந்தால், நாம் கலந்து பேசலாம்—வழிவகை காணலாம்.

மொரார்ஜி தேசாய்:- "கொள்கை அடிப்படையில், இந்த மசோதாவை நான் எதிர்க்கிறேன்."

இரா. செழியன்:—"எனது மசோதாவை நான் வலியுறுத்துகிறேன்."

★

(15-ம் பக்கத் தொடர்ச்சி)

திரும்ப வந்துவிட்டதாக நினைத்தான். மன்னனுக்கு, கவலை ஆத்திரமாகி, அது அதிகரித்து வெறியாகி விட்டது. சாட்டையை எடுத்து குதிரையைத் துவைத்தான். குதிரை கதறியது.

"எங்கே பெர்க்ளீஸ்! நன்றிகெட்ட மிருகமே எங்கே அவன்? அவனை எங்கு போய்க் கொன்ருய்!" என்று கர்ஜித்தான். லாயத்திலிருந்த மற்ற குதிரைகள் மிரண்டன, சில குதிரைகள் கயிறை அறுத்துக்கொண்டு வெருண்டு ஓடின.

கிளிஸ் தெனீஸ் கைகள் வலியெடுக்கும் வரை அந்தக் குதிரையை அடித்தான். சிறிது நேரத்திற்குப் பின் சாட்டையைத் தூக்கி எறிந்து விட்டுப் பைத்தியம் பிடித்தவனைப் போல் அரண்மனைக்குப் போனன்.





4-ம் பக்கத் தொடர்ச்சி

வனே! நெருப்பைக் கிளறி முகம் பார்க்காதே! போ! போய்விடு! வெற்றி தோல்வியைப் பொறுத்திருந்து பார்!'' டெல்பி கோபமாகப் பேசினுள்,

''மன்னியுங்கள் தேவா! அவன் சின்னவன்! அறியாது செய்த பிழை! அண்ணன்மேல் உள்ள அன்பு அவனை அலைக்கழித்துவிட்டது'' என்று மன்னன் கிளிஸ்தெனீஸ் டெல்பியிடம் மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

பெர்க்ளீசுக்கும் ஆத்திரம் அடங்கவில்லை. ஏறிட்டுப் பார்த்தான் டிராக்கோவை! டிராக்கோவின் கண்களில் நீர் அரும்பு கட்டி நின்றது. வெட்கத்தால் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டான். மூவரும் நடைப் பிணங்களாய் மண்டபத்தை விட்டுக் கிளம்பினுர்கள். கெல்லாஸ் வந்தடையும் வரை ஒருவரோடு ஒருவர் பேசவில்லை, ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்கவில்லை. குற்றம் புரியாதவர்கள் மீது பழி! ஒற்றுமையாக இருந்தவர்களிடையே பிளவு! இதுதான் அரசியலோ?

அன்றிலிருந்து கிளிஸ் தெனீஸ் துயில் கொள்ளவில்லை. எப்பேர்ப்பட்ட கவலையையும் அந்தபுரம் போனுல் மறந்துவிடும் குணம் கொண்ட அவனை புத்திரர்கள் கவலை வாட்டி எடுத்தது. பரிகாரம்—தெரியாமல் பரிதவித்தான். மீண்டும் டெல்பிக்குப் போகவே அவன் மனம் திரும்பத் திரும்ப நினைத்துச் சுழன்றது மறுநாள் காலை டெல்பிக்குப் போகத் தீர்மானித்துவிட்டான். ஆனுல். அதற்குள் டெல்பியிலிருந்து அவனுக்கொரு இரகசிய முடங்கல் வந்துவிட்டது. அதில்:—

கிளிஸ் தெனீஸ் கவனத்திற்கு!

டெல்பி சந்நிதானம் வரையும் முடங்கல். மக்கள் கவலை உன்னைக் குழப்பியிருக்கும் என்பதை நாம் அறிவோம், கிரேக்கத்தில் குழப்பம் ஏற்படாது தடுக்க சந்நிதானம் புதியதொரு மார்க்கத்தை உனக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறது.

டெல்பியின் மூலஸ்தானத்திலிருந்து அடுத்த கட்டளை பிறக்கும் வரை பெர்க்ளீசை உனது நாட்டைவிட்டு அப்புறப்படுத்தி வைக்கவேண்டும். காலம் நிலைமையை மாற்றிச் சிக்கலைத் தீர்க்கும் என நம்புகிறோம். கிரேக்கத்தில் அமைதி கெடக்கூடாது; கெல்லாஸ் மண்டலத்தில் போர் முழக்கம் கேட்காது தவிர்க்க வேண்டுமானுல் இதைத்தவிர வேறுமார்க்கம் இல்லை.

இங்ஙனம்,
டெல்பி சந்நிதானம்.

என்று எழுதப்பட்டிருந்தது. இந்த ஓலை கிளிஸ் தெனீசின் மனச்சோர்வைக்குறைக்கவில்லை குழந்தையைப் பெற்று கானகத்திற்கு அனுப்ப எந்தத் தந்தைக்குத்தான் மனம் வரும்! கெல்லாஸ் இனி தன் கௌரவத்தைக் காப்பாற்றிக்கொள்ள வழியே இல்லை என்று கிளிஸ் தெனீஸ் முடிவு கட்டிவிட்டான். இருந்தாலும் டெல்பியின் கட்டளையை மீற அவனுக்குத் துணிவில்லை. அவனையும் அறியாமல் அவன் கால்கள் பெர்க்ளீஸ் இருக்கும் மண்டபத்தை நோக்கி அடியெடுத்துவைத்தன. காவலர்கள் சிரம் கவிழ்த்து வழிவிட்டு நின்றுர்கள். வெள்ளைப் புருக்களைப்போல் வேலையின்றி ஓடித்திரியும் சேடிப் பெண்களும் அப்படியே!

கிளிஸ் தெனீஸ் மண்டபத்திற்குள் நுழைந்து மணியைத் தட்டினுன், ஒரு வாலிபன் ஓடி வந்தான். அவன் படை உடுப்பு உடுத்தியிருந்தான். கையில் கத்தியிருந்தது.

''பெர்க்ளீஸ் எங்கே?'' மன்னன் கேட்டான்

''இரவு போனவர்கள் இன்னும் வரவில்லை!''

எங்கே போனுன்? ஏன் இன்னும் வரவில்லை? புருவத்தை !வளைத்துப் பேசினுன் மன்னன்.

''என்னையும் வா என்றுர்கள். சரி என்றேன். போருடை அணி என்றுர்கள். அணிந்துகொண்டேன். புறப்படப் போகும்போது திடீரென்று நீ வேண்டாம் என்று கூறிவிட்டார்கள்'' பணிவுடன் அந்த வாலிபன் தெரிவித்தான்.

'நீ ஏன் பின் தொடரவில்லை?''

''இங்கேயே இருக்கவேண்டும் என்பது இளையவர் கட்டளை'' வாலிபனின் பேச்சில் ராஜபக்தி முற்றுகை இட்டிருந்தது.

கிளிஸ்தெனீஸ் மறுமொழி பேசாமல் நேராக லாயத்திற்குச் சென்றுன். அங்கே பெர்க்ளீசின் குதிரை அலங்கரித்து நின்றது. இன்னும் பெர்க்ளீஸ் போகவில்லை இங்கே தான் இருக்கிறுன் என்று பெருமூச்சுடன் திரும்பிய கிளிஸ்தெனீஸ் குதிரையின் கால்களைப் பார்த்தான். அதன் பின் கால்களில் ரத்தக் காயம்! உடம்பிலிருந்து வியர்வை வடிந்துகொண்டிருந்தது. அருமை மகன் பெர்க்ளீசை அவனுடைய குதிரை எங்கோ ஒரு மலைப் பகுதியில் கவிழ்த்துவிட்டுத்

(14-ம் பக்கம் பார்க்க)

# "காஞ்சி" 4-ம் ஆண்டு மலர்

தயாராகிக்கொண்டிருக்கிறது!

மலரில்:

அமைச்சர் மா. முத்துசாமி—வந்தால்-தந்தால்-தருவேன்

என். வி. நடராசன்—அரிமா நோக்கு

மா. கி. தசரதன்—விரலுக்குத்தக்க வீக்கம்

அரங்கண்ணல் - எனது பயணம்

டாக்டர் அ. மு. பரமசிவானந்தம் - மெய்யறிவு

'சோமு' - இரவு என்ற குருவி!

அண்ணல் - ஆகா! ஜப்பான்!

முதலான எழுத்தோவியங்களோடு

அறிஞர் அண்ணாவின் தனிச் செயலாளர் கு. சொக்கலிங்கம் அவர்கள் எழுதும்

அறிஞர் அண்ணாவின் அமெரிக்கப் பயணத்தில்...! என்ற சிறப்புக் கட்டுரையும்

## பேரறிஞர் அண்ணா அவர்களின்

தம்பிக்கு மடல், கதை, கட்டுரை முதலியவற்றோடு

செப்டெம்பரில் வெளிவருகிறது!

3-ம் பக்கத் தொடர்ச்சி

முயற்சியுள்ள எல்லாத் துறைகளிலும். அது புரிந்துள்ள சாதனைகளிடமும, அன்பையும மதிப்பையும் நமது மக்களது உள்ளத்தில் உருவாக்கவேண்டும்.

என்றும் குறிப்பிடுகிறார். இதிலிருந்து நாட்டு மக்களிடத்தில்—

1. நாட்டுப் பற்றில்லை-பிரிவினை எண்ணம் வளர்ந்து விட்டது.
2. அரசு முயற்சிகள் எடுத்துக் காட்டப்படவில்லை —அல்லது மக்களால நம்பப்படவில்லை.
3. அரசின்பாலும், நாட்டின்பாலும அன்பினையும் மதிப்பையும காங்கரஸ் வளாக்கவில்லை.
4. இவை அனைத்தும் இனி மேற்கொள்ளப்பட வேண்டும்.

என்ற வகையிலும் பொருள்கொள்ள முடியுமல்லவா? அப்படியானால் கடந்த 21 ஆண்டுகளில காங்கரசும் மத்திய அரசும் எதைச் செய்து வந்தன? என்ற வினா வெழுவது இயற்கைதானே!

நடந்து முடிந்த இருபதாண்டுக் காலத்தில் நாட்டு மக்களது அன்பினையும மதிப்பினையும் பெறத் தவறிய காரணத்தாலேயே —மக்களது வாழ்வு எந்த வகையிலும் ஒளிமுகம் நோக்கத் திருப்பப்படாததாலேயே பல மாநிலங்கள், காங்கிரசுக்கு சவக்குழி கட்டி இருக்கின்றன.

இதைப்போன்றே, தமிழகத்திலும் காங்கிரஸ் புதைகுழிக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இங்கே கழகம் ஆட்சிப் பொறுப்புக்கு வந்தநாள் முதல், தமிழக மக்களது பல பிரச்னைகள் தீர்க்கப்பட்டு வந்திருக்கின்றன. கடந்த இருபதாண்டுக் காலத்தில் காங்கிரசுக் கட்சியினால தாக்கப்பட முடியாமலிருந்த உணவுப் பிரச்னையை மட்டும் கடந்த ஓராண்டில் தீர்த்துவிட்டு, வெற்றிப் பெருமிதத்தோடு நிமிர்ந்து நிற்கிறது கழகம்.

தொழில் பூசல்களும், தகராறுகளும் அங்குமிங்குமாகத் தலையெடுத்திருப்பதற்குக் காரணமெல்லாம் கடந்த 21 ஆண்டுக்கால தவறுகளே என்பதை தமிழக மக்கள் நன்கு புரிந்து கொண்டிருக்கிறார்கள்.

மக்களது நன் மதிப்பைப் பெறத்தவறி, அவர்களை மதியற்றவர்களாய், உணர்வற்றவர்களாய் மதித்து இழித்தும் பழித்தும் ஆணவத்தோடு நடந்து வந்ததன எதிரொலியை அனுபவித்துக் கொண்டிருப்பவர்கள்.

''வன்முறையால ஜனநாயகத்துக்கு ஆபத்து ஏற்படும்'' என்று குடியரசுத் தலைவர் சுட்டிக் காட்டுமளவுக்கு, தமிழகத்தில் அமைதி இன்மையையும், வன்முறைச் செயல்களையும், தூண்டிவிட்டு வருவதிலிருந்து உண்மையிலே, கடந்த காலத்தின் பாவத்தை அவர்கள் உணர மறுக்கிறார்கள் என்றுதான் தெரிகிறது.

அந்த இருபதோராண்டுகளின் படிப்பினையை இனியும காங்கிரசார் ஒழுங்காக உணர மறுத்தால் அது காங்கிரசுக்கு மட்டுமல்ல—நாட்டுக்கும், மக்கள் வாழ்வுக்குமகூட கேடுதான் பயக்கும் என்பதை உணர வேண்டியது காங்கிரசாரின் தலையாய கடமையாகும்! அதனை நினைவுகளுக்கான விழா நாளாக இருபத்திரெண்டாம் ஆண்டு சுதந்திர நாள் அமைந்தால்தான் எதிர் காலத்திலாவது [illegible]க்கும்.

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்—2
36, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.